# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஐப்பசி 06 வெள்ளிக்கிழமை (22-10-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:332


# 2005 டிசெம்பரில் நிச்சயம்

# ஜனாதிபதித் தேர்தல்!

## எப்படியும் நடந்தே தீரும் என்கிறார் பீரிஸ் சந்திரிகா அதை இழுத்தடிக்க முடியாதாம்

கொழும்பு,ஒக்ரோபர்22

**திட்டமிட்டபடி அடுத்த ஆண்டு டிசெம்பருக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் எப்படியும் நடந்தே தீரும். அதை மேலும் ஒரு வருடத்துக்கு ஜனாதிபதி இழுத்தடிக்க வாய்ப்புண்டு என்ற பேச்சுக்கே இடமில்லை.**

**- இப்படிக் கூறியிருக்கின்றார் ஐக்கிய தேசியக் கட்சிப் பேச்சாளரும், முன்னாள் அரசமைப்பு விவகார அமைச்சரும், எம்.பியுமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்.**

1994ஆம் ஆண்டு இறுதியில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முதல் தடவையாக வெற்றியீட்டி ஜனாதிபதியான சந்திரிகா குமாரதுங்க அத்தேரிவின் மூலம் 2000ஆம் ஆண்டு இறுதியில் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வரை பதவியில் நீடிப்பதற்கு அதிகாரம் பெற்றார்.

எனினும், 1999 இறுதியிலேயே - ஒரு வருடம் முன்னதாக - அடுத்த ஜனாதிபதித் தேர்தலை அவர் நடத்தி அதில் வென்றார். வெற்றிபெற்ற கையோடு தமது பதவியை ஏற்கும் வகையில் பகிரங்கமாகச் சத்தியப்பிரமாணமும் செய்துகொண்டார்.

எனினும் -

அந்தத் தேர்தலுக்கு முன்னர் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் தாம் காயமுற்றதால், தாம் தொடர்ந்தும் ஜனாதிபதியாகப் பணியாற்றக் கூடிய நிலையில் இருப்பதை வெளிப்படுத்தி உறுதிப்படுத்தும் விதத்தில் தமது முதலாவது பதவிக்காலத்தை ஒட்டிய எஞ்சிய காலத்துக்கான மீள் பதவிப்பிரமாணத்தையே தாம் அப்போது செய்தார் என்றும் -

தமது இரண்டாவது பதவிக்காலத்துக்கான சத்தியப்பிரமாணத்தை 2000ஆம் ஆண்டு இறுதி

(14ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கப்பூரில் சூசைக்கு இயன் மருத்துவச் சிகிச்சை!

சிங்கப்பூர்,ஒக்.22

அவசர மருத்துவ சிகிச்சைக்காக வெளிநாடு சென்ற விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் தளபதி கேணல் சூசை சிகிச்சையை முடித்துக் கொண்டு விரைவில் தாயகம் திரும்புவார் எனத் தெரிகின்றது.

இந்திய அமைதிப்படை வடக்கு - கிழக்கை ஆக்கிரமித்த சமயம், பதுங்கியிருந்த இந்தியப் படைகளின் தாக்குதலுக்கு சூசை இலக்காகியிருந்தார்.

அப்போது அவரது உடலில் தைத்த துப்பாக்கிச்சன்னம் ஒன்று அவரது தோள்பட்டையில் கழுத்தை அண்மித்ததாகப் புகுந்து தங்கிவிட்டது.

அதிர்ஷ்டவசமாக அது அவரின் நரம்பு எதனையும் பாதிக்காவிட்டாலும் உடலுக்குள் அந்தச் சன்னம் சிறிது நகர்ந்ததால் தொடர்ந்து நோவினால் அவர் பாதிக்கப்பட்டார்.

சத்திரசிகிச்சை மூலம் அந்தச் சன்னத்தை அகற்றலாம் என்ற திட்டத்தில் அவர் சிங்கப்

(14ஆம் பக்கம் பார்க்க)



தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன், நோர்வே அனுசரணைக்குழுவின் பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் ஆகியோரை நேற்றுமுன்தினம் நோர்வேயில் சந்தித்துப் பேச்சு நடத்தியபோது...

## புலிகளின் அரசியல் குழு ஞாயிறன்று திரும்புகிறது

மேற்கு நாடுகளில் மூன்றுவாரகாலமாகச் சுற்றுப்பயணம் செய்துவரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின் குழுவினர் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சுவிட்ஸர்லாந்திலிருந்து கொழும்பு புறப்படுவார்கள் எனத் தெரிகின்றது.

நேற்றுமுன்தினம் நோர்வேயில் தமது பயணத்தை முடித்துக்கொண்டு சுவீடனின் தலைநகர் ஸ்டொக்ஹோம் சென்ற புலிகளின் குழுவினர், இன்று ஜேர்மனியின் பேர்லின் நகருக்குச் சென்று அந்தநாட்டு அதிகாரிகளைச் சந்தித்து உரையாடுகின்றனர்.

அதை முடித்துக்கொண்டு ஞாயிறன்று சுவிட்ஸர்லாந்துக்குத் திரும்பும் புலிகளின் குழுவினர்,

(14ஆம் பக்கம் பார்க்க)

### நாளை தொடக்கம் ரூபா 2/= அதிகரிப்பு

**அன்புநிறை வாசகர்களே!**

உங்களது அபிமானத்துக்குரிய உதயன் நாளிதழின் விலையை நாளை (23.10.2004) தொடக்கம் இரண்டு ரூபாவால் உயர்த்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

பத்திரிகை அச்சிடும் தாள், எரிபொருள்கள் மற்றும் நானாவித விலை அதிகரிப்புகள் அவ்வப்போது நடைமுறையாகி வருகின்றன. எனினும், மிகப் பல மாதங்களாக அந்தச் சுமையை நாமே தாங்கிக் கொண்டோம்.

இப்போது அதற்கு அப்பாற்பட்ட நிலையிலேயே, சிறிய உயர்வைச் செய்துள்ளோம். தவிர்க்க முடியாத இந்த விலையேற்றத்தைப் புரிந்து கொண்டு எங்களுக்கு ஆதரவு நல்குமாறு வாசகர்களாகிய உங்களை மிக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

உதயனின் தரமும் சிறப்பும் என்றும் மேலோங்கி நிற்கும் என்பது நீங்கள் அறிந்ததே.

நன்றி

- நிர்வாகத்தினர்.

## கருணா கட்சி ஆரம்பித்ததை எதிர்த்து பட்டிருப்பில் ஹர்த்தால்

### ஆர்ப்பாட்டப் பேரணியும் நடந்தது

பட்டிருப்பு,ஒக்.22

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து துரத்தப்பட்ட கருணா புதிய கட்சி ஆரம்பித்துள்ளார் என்று கூறப்படுவதை எதிர்த்து அம்பாறை மாவட்டம் பட்டிருப்புத் தொகுதியில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதனால், அங்கு இயல்பு வாழ்வு பாதிக்கப்பட்டது.

களுவாஞ்சிக்குடி பொதுச்சந்தை மக்கள் நடமாட்டமோ வியாபார நடவடிக்கைகளோ இன்றி வெறிச்சோடிக் கிடந்தது. அரச அலுவலகங்களும் வங்கிகளும் இயங்கின. எனினும், ஊழியர்

(14ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை – இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் அடுத்த மாதம் 15இற்கு முன்னர் கைச்சாத்து

கொழும்பு,ஒக்.22

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உத்தேச பாதுகாப்பு ஒப்பந்தம் அடுத்தமாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் கைச்சாத்திடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு வந்த இந்தியப் பாதுகாப்பு உயர்மட்டக் குழு ஒன்று இந்த ஒப்பந்தம் குறித்துப் பாதுகாப்பு அமைச்சின் செயலர் சிறில் ஹேரத் மற்றும் முப்படைத்

(14ஆம் பக்கம் பார்க்க)


NSB
சேமிப்பு மாதம்

சேமிப்பு பெறும் காலத்தில்

ஒக்டோபர் 1 -'31 வரையான NSB சேமிப்பு மாதத்தில்,ஸ்திரி கணக்கில் பணம் வைப்புச் செய்ய ஆரம்பியுங்கள்.

ஸ்திரி கணக்கு வைப்பாளர்கள் பெறும் சலுகைகள்.

- "ரண்சஹன" நகை அடகு பிடித்தல் சேவையில் சாதாரண வட்டி வீதத்திலும் 1% குறைவான வட்டி.
- சுயதேவை கடன்களுக்கு சாதாரண வட்டி வீதத்திலும் 1% குறைவான வட்டி.
- வைப்புகளுக்கெதிரான கடன்களுக்கு சாதாரண வட்டி வீதத்திலும் 0.5% குறைவான வட்டி.

தேசிய சேமிப்பு வங்கி- உங்கள் குடும்ப வங்கி



# அரசியல்புள்ளிகளின் குட்டுக்கள் அம்பலமாகும் என்பதாலேயே வீரப்பன் சுட்டுக் கொல்லப்பட்டார்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. ஈழவேந்தன் கருத்து

கொழும்பு,ஒக்.22

இந்திய அரசியலில் இருக்கும் பெரும் புள்ளிகளினதும், பல்வேறு கட்சிகளின் தலைவர்களாக இருப்பவர்களினதும் குட்டுகள் அம்பலமாகிவிடும் என்ற காரணத்தினாலேயே சந்தன மரக்கடத்தல் வீரப்பன் விசாரணைகளின்றிச் சுட்டுக்கொல்லப்பட்டார்.

வீரப்பனால் வெட்டப்பட்ட சந்தன மரங்கள் இப்போதும் அரசியல்வாதிகளின் வீடுகளில் மேசை, கதிரை, கட்டில்களாகவும், அலங்காரப் பொருள்களாகவும் உருமாறியிருக்கின்றன.

உயிருடன் பிடித்தால் இந்தத் தொடர்புகளும், உண்மைகளும் வெளிப்பட்டுவிடுமோ என்ற அச்சத்தினாலேயே வீரப்பன் சுட்டுக்கொலலப்பட்டார். இது ஒரு சதிச்செயல்.

- இப்படித் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான ஈழவேந்தன். முன்னாள் பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகாவின் மறைவுக்கான அனுதாபப் பிரேரணைமீது நேற்று நாடாளுமன்றில் உரையாற்றும்போதே ஈழவேந்தன் எம்.பி. இப்படிக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

அமரர் காமினி பொன்சேகா மனிதாபிமானம் நிறைந்தவர். அனைத்து இன மக்களுடனும் அன்பாகப் பழகியவர்.

தவறுசெய்வது இயற்கை, ஆனால், அதை மன்னிப்பது பெருந்தன்மை. இன்று காமினி பொன்சேகா உயிருடன் இருந்தால், வீரப்பனின படுகொலையைக் கண்டித்திருப்பார் என்பதும் உறுதி.

வீரப்பன் பல்வேறு கொலைகளைச் செய்தவர்தான்; அந்த நான் மறுக்கவில்லை. வீரப்பனை இப்படி ஒரு தீவிரவாதியாக மாற்றியது யார்? வீரப்பனைக் கைக்கூலியாக வைத்துக் கொண்டதில் அரசியல்வாதிகளும், பெரும்புள்ளிகளும்தான் நன்மை அடைந்தனர்.

இந்த விடயத்தில் காலத்திற்குக் காலம் காவல்துறை உட்பட பலதரப்பட்ட அரசியல்வாதிகளின் ஆதரவு வீரப்பனுக்கு இருந்தே வந்துள்ளது என்பதை எவரும் மறுக்கமுடியாது.

தமிழ் நாட்டில் எந்தவொரு தமிழ் அரசியல்வாதிக்கும் இல்லாத துணிச்சல் வீரப்பனுக்கு இருந்தது. கொலையாளியாகத் திரிந்த வீரப்பன், கடைசிக் காலத்தில் திருந்தி நல்லமுறையில் வாழ்க்கை நடத்தியவர்.

காவிரி நீர் தமிழகத்திற்கு வேண்டும் என்றார். கர்னாடகத்தில் தமிழர்கள் தாக்கப்பட்ட போது அவர்களுக்காகக் குரல் கொடுத்தார். வீரப்பன் தனக்காக எதையும் கேட்கவில்லை.

பயங்கரக் கொலைகாரியாகவும், கொள்ளைக்காரியாகவும் இருந்த பூலான்தேவிக்கு மன்னிபபு வழங்க முடிந்தது என்றால், ஏன் வீரப்பனுக்குப் பொது மன்னிப்பு வழங்க மறுத்தனர்? வீரப்பனைச் சுட்டுக்கொன்ற அதிரடிப்படை வீரர்களுக்கு தேசிய விருதும், சம்பள உயர்வும், சன்மானங்களும் வழங்கப்பட்டுள்ளன.

ஒரு வீரப்பனைத் தேடுகிறோம் என்று கூறிக்கொண்டு அப்பாவிகளான எத்தனை மலைவாழ் கிராமத்தவர்களைச் சுட்டுக்கொன்றுள்ளனர் பொலீஸார்? கணக்கிட முடியாத இளம் பெண்களைப் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கினர். எத்தனை குடும்பப் பெண்களைச் சித்திரவதை செய்துள்ளனர்? இவையெல்லாம் அதிரடிப்படையினர் செய்த சட்டபூர்வமான செயல் என்று இந்திய அரசு அங்கீகரிக்கின்றதா?

இச் செயல்களுக்காகத்தான் தமிழக அரசு இந்த அதிரடிப்படையினரைக் கௌரவிக்கின்றதா? - என்றும் ஈழவேந்தன் கேள்வியெழுப்பினார்.

தமிழ்நாட்டுப் பொலீஸ் இன்று சர்வதேச மட்டத்தில் பாராட்டப்படுகின்றது. அவர்களால் வீரப்பனை உயிருடன் பிடித்திருக்க முடியும். ஆனால், அவர்கள் அதைச் செய்யவில்லை.

உயிருடன் பிடித்து அவனை நீதியின் முன் நிறுத்தியிருந்தால் அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்தான்.

ஆனால், அவர்கள் அதைச் செய்யத் தவறிவிட்டனர். காரணம் வீரப்பன் வாய்திறந்தால் அதிர்ச்சியான பல உண்மைகள் வெளிப்பட்டு விடுமோ?, பெரும்புள்ளிகளின் முகமூடிகள் ஒழிக்கப்பட்டு விடுமோ என்ற அச்சம்தான்.

வீரப்பன் சுட்டுக்கொல்லப்பட்டமை ஒரு சதி - என்று மேலும் அவர் அடித்துக் கூறினார் ஈழவேந்தன் எம்.பி. (க)

### தொழிற்பயிற்சித்துறை விஸ்தரிக்கப்படும்

இளைஞர்களுக்கு மிகக் கூடுதலான வேலைகளை வழங்கும் பொருட்டு தொழிற்பயிற்சித் துறையை விஸ்தரிக்க அரசு முடிவெடுத்திருப்பதாகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

தொழிற்பயிற்சி வசதிகள் விஸ்தரிக்கப்பட்டிருப்பது காரணமாக இளைஞர்கள் பெரிதும் பலனடைவார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பாடசாலைகளில் படிப்பை முடித்துக்கொண்டவர்களுக்குக் கூடுதலான வேலை வாய்ப்புகளை வழங்கவும் - நாட்டின் தேசிய அபிவிருத்திக்கு அவர்களின் பங்களிப்பை ஊக்குவிக்கவும் - அரசு ஏற்பாடுகளைச் செய்துள்ளது என்றும் பிரதமர் தெரிவித்தார்.(எ-ரி)

## வாணி விழாக்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.22

யாழ். மாநகரசபை ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் வாணிவிழா இன்று வெள்ளிக் கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ். மாநகர ஆணையாளர் கலாநிதி குணராசா தலைமையில் நடைபெறும்.

ஆசியுரையினை நல்லை ஆதீன பீடாதிபதி ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்குவார்.

'எதிலும் எந்த இடத்திலும் சக்தியடா' என்ற விடயத்தில் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் சொற்பொழிவாற்றுவார். மாநகரசபை ஊழியர்களின் பக்திப்பாடல்களும் இடம்பெறும். (4-7)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஒக்.22

இணுவில் கிழக்கு கலாஜோதி சனசமூக நிலையம் நடத்தும் வாணிவிழா நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

பிரதம விருந்தினராக 'போரூட்' நிறுவன திட்ட இணைப்பாளர் அ.டொனியும், சிறப்பு விருந்தினர்களாக சுன்னாகம் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.பா.பவநிதன், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் பபகீரதன், போரூட் வெளிக்கள உத்தியோகத்தர் வே.ந.மூர்த்தி, வளநாடன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

மாணவர்களிடையே நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டி, பேச்சுப்போட்டி என்பவற்றில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவமும் பட்டிமன்றம், நாடகம், சிறுவர் கலை நிகழ்வுகள் என்பனவும் இடம்பெறும். (4)

★ ★ ★

சுழிபுரம்,ஒக்.22

பண்ணாகம் அம்பாள் கலைமன்றம் நடத்தும் வாணிவிழா இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 2மணிக்கு பண்ணாகம் நெல்லியாள் காளிகோவில் முன்றிலில் தி.சம்பந்தமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும் சிறப்பு விருந்தினராக ஆ.கதிரமலைநாதனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

பொது அறிவுப் போட்டி, வழக்காடு மன்றம், நடன அரங்கம், கவியரங்கம், நாடகம் ஆகியவை நடைபெறவுள்ளன.

பண்ணாகம் அம்பாள் கலைமன்றத்தின் 43 ஆவது தயாரிப்பான 'நிறைவேறுமா நிகழ்காலம்' என்னும் சமூக சீர்திருத்த நாடகம் மேடையேற்றப்பட்டு கலைஞர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். (4-28)

# தொலைக்காட்சித் தொடர்களுக்கு எதிராக விழிப்புணர்வுப் பிரசாரம்!

## இணுவில் மாணவர்களின் முற்போக்குச் செயற்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.22

இணுவில் கலாஜோதி சனசமூக நிலையத்தின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நவராத்திரி விழாவின் இறுதி மூன்று நாள்களும் அப்பகுதி மாணவர்கள் தொலைக்காட்சித் தொடர்களுக்கு எதிரான விழிப்புணர்வுப் பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சமூகத்தைச் சீரழிக்கின்ற - மாணவர்களின் கல்வியைப் பாதிக்கின்ற - தொலைக்காட்சித் தொடர்களும் சினிமாப் பாடல்களும் தற்போது புதிதுபுதிதாக வந்துகொண்டிருக்கின்றன. இவற்றால் எமது சமூகம், குறிப்பாக மாணவர் சமூகம் மிகவும் பாதிப்படைகின்றது.

எனவே, வீடுகளில் உள்ள தொலைகாட்சிகளில் செய்திகள் மற்றும் அவசியமான நிகழ்ச்சிகள் தவிர்ந்த ஏனைய நிகழ்ச்சிகளையும் தொலைக்காட்சித் தொடர்களையும் போடாமல் தவிர்ப்பதன் மூலம் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென்று மேற்படி பகுதியில் மாணவர்கள் பிரசாரம் செய்துவருகின்றன.

இதுதொடர்பான பேச்சுப் போட்டிகள் மற்றும் பொது அறிவுப் போட்டிகளும் மாணவர்கள் மத்தியில் நடத்தப்படவுள்ளன.

இந்தச் செயற்பாடுகளுக்கு அப்பகுதி மக்கள் மிகுந்த ஒத்துழைப்பு வழங்கி வருவதுடன், மாணவர்களின் இந்த முற்போக்கான செயற்பாட்டைப் பாராட்டி இருக்கின்றனர். (4)

# விதைப்பை மேற்கொள்ளாதவர்களுக்கு விதைநெல் கிடைத்தது எவ்வாறு?

## கேள்வியெழுப்புகின்றனர் பொதுமக்கள்

கைதடி,ஒக்.22

மறவன்புலோ வடக்குப் பிரதேசத்தில் பயிர்ச்செய்கைக்கென இராணுவத்தினரால் அனுமதிக்கப்பட்ட இடங்களில் நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு கமநல சேவை நிலையத்தினால் வழங்கப்படும் இலவச உள்ளீடு வழங்கலில் சில முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகப் பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் 1999 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இவ்வருடமே இராணுவத்தினரால் நெற்செய்கை மேற்கொள்ள விவசாயிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

இங்கு நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக யாழ்ப்பாண கமநல சேவைத்திணைக்களம் கைதடியில் உள்ள கமநல சேவை நிலையம் ஊடாக விதைநெல் உட்பட சில உள்ளீடுகளை அண்மையில் இலவசமாக வழங்கியது.

இந்த இலவச உள்ளீடுகளை நெல் விதைப்புச் செய்யாத சிலரும் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அத்தோடு, அப்பகுதியில் வயற்காணி இல்லாதவர்களிற்கும் வெளிநாட்டில் உள்ளவர்களின் பெயர்களிற்கும் விதைநெல் வழங்கப்பட்டிருப்பதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். வயற்காணிக்குரியவர் வெளிநாடுகளில் உள்ளபோது அவர்களின் பெயரில் இவை பெறப்பட்டுள்ளமை வியப்பாக உள்ளதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை -

மறவன்புலோ விவசாய சம்மேளனத்தினரால் இலவச உள்ளீடுகள் பெறவந்த விவசாயிகளிடமிருந்து ஒரு தொகைப்பணம் பெறப்பட்டதாகவும், இப்பணத்தை வழங்காவிடில் இலவச உள்ளீடுகளும் வழங்கப்படமாட்டாது எனக் கூறப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் உள்ளீடுகள் பெறுவதற்கு வந்த சகல விவசாயிகளும் பணம் செலுத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பாக விவசாயிகள் சிலர் யாழ்ப்பாண கமநல சேவைத் திணைக்களத்திற்கு முறைப்பாடுகள் செய்துள்ளதாகவும் தெரியவருகின்றது. (8-75)

# இந்திய இராணுவத்தால் கொல்லப்பட்ட வைத்தியசாலை ஊழியர்களுக்கு அஞ்சலி


யாழ்ப்பாணம்,ஒக்.22

யாழ். போதனா வைத்தியசாலையில், கடமையில் இருந்தபோது இந்திய இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட டாக்டர்கள், தாதியர்கள், சிற்றூழியர்கள் உட்பட 21 உத்தியோகத்தர்களின் 17ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்வு நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

காலை 10 மணிக்கு வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.சதுர்முகம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கொல்லப்பட்டவர்களின் திருவுருவப்படங்களுக்குப் பணிப்பாளர் முதற்சுடரை ஏற்றிவைத்து மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியதைத் தொடர்ந்து, வைத்தியசாலைச் செயலாளர் இ.பத்மநாதன் மற்றும் தாதிய பரிபாலகர் மற்றும் மரணித்தவர்களின் உறவினர்களும் 21 திருவுருவப்படங்களுக்கு ஈகச்சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்து, மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

அஞ்சலியைத் தொடர்ந்து பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் தலைவர் உட்பட வைத்தியசாலைச் செயலாளர், தாதிய பயிற்சிப் பாடசாலை அதிபர் செல்வி ஆர்.வல்லிபுரநாதன், தாதிய உத்தியோகத்தர் திருமதி கணபதி அருட்செல்வி மற்றும் நல்லூர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செழியன் ஆகியோர் நினைவுரையாற்றினர்.

இந்நிகழ்வினையொட்டி உயிரிழந்தவர்களின ஆத்மசாந்திக்காக வைத்தியசாலையிலுள்ள இந்து, கிறிஸ்தவ ஆலயங்களில் விசேட பூசை, ஆராதனைகளும் நடைபெற்றன.(4-5-7-15-86-139)



நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வுகளின்போது ஈகச்சுடரினை யாழ். நல்லூர்க் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செழியன் ஏற்றுவதையும் வைத்தியசாலைப் பணிப்பாளர் எஸ்.சதுர்முகம் மற்றும் உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் ஆகியோர் அஞ்சலி செலுத்துவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: வசந்தன்)*

## சகலசமய சின்னங்களுக்கும் பாதுகாப்பளிக்கும் புதியசட்டம்

கொழும்பு,ஒக்.22

சமயங்களுக்கிடையில் சௌஜன்யத்தை வளர்க்கும் நோக்கத்துடன் புத்தசாசன அமைச்சு சமயங்களைப் பாதுகாக்கும் சட்ட மூலம் ஒன்றை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற உத்தேசித்துள்ளது.

இந்தச் சட்டத்தின் மூலம் சகல சமயங்களினதும் சின்னங்களைப் பாதுகாக்க வழி செய்யப்படும். சமயச்சின்னங்கள் சிதைக்கப்படுவது, துஷ்பிரயோகம் செய்யப்படுவது மற்றும் வியாபாரப் பொருள்களாகப் பயன்படுத்துவது போன்ற நடவடிக்கைகளிலிருந்து இச்சட்டம் பாதுகாப்பளிக்கும். சகல சமயச் சின்னங்களும் சமய அனுஷ்டானங்களும் மதிப்பளிக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அண்மையில் ஐநா.பொதுசபைக் கூட்டத்தில் நிகழ்த்திய உரையின் போது வெளியிட்ட கருத்தின் அடிப்படையில் இப்புதிய சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக புத்தசாசன ஆணையாளர் எச்.ஏ.டி.சுனில் தெரிவித்துள்ளார். சமய பாதுகாப்புச் சட்டத் தயாரிப்பு பூர்த்தியாகிவிட்டதாக சட்டவாக்கத் திணைக்களத்தினர் அறிவித்திருப்பதாகப் புத்தசாசன அமைச்சின் செயலாளர் டி.டபிள்யு அபயவிக்கிரம தெரிவித்துள்ளார். (ப)

## மக்கள் தொடர்பகம் இடம்மாற்றம்

புதுக்குடியிருப்பு,ஒக்.22

புதுக்குடியிருப்பு கைவேலியில் இயங்கி வந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச செயலக மக்கள் தொடர்பகம் நேற்றுமுதல் உடையார்கட்டு வள்ளிபுனம் இனியவாழ்வு இல்லத்திற்கு முன்பாக இயங்குகின்றது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. (4)

உதயன்

## பலமடைகிறார்கள் சமாதான விரோதிகள்

சமாதான விரோத சக்திகள் தென்னிலங்கையில் பலமடைகின்றன. இதனால், அமைதி முயற்சிகளில் பாரிய பின்விளைவுகளை - பின்னடைவுகளை - ஏற்படும் அபாயம் உள்ளது.

- இப்படி எச்சரித்திருக்கிறார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் முயற்சிகளில் அனுசரணைப் பணியாற்றும் நோர்வேத் தரப்பின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்ஸனிடமே இவ்வாறு நேரில் தெரிவித்திருக்கின்றார் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர்.

சமாதான முயற்சிகள் இழுபடுவதால் அந்த முயற்சிகளின் மீது ஈழத் தமிழர்களுக்கு இருந்த நம்பிக்கை அருகிவருவதையும் அவர் நோர்வே அனுசரணையாளர்களுக்குச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

ஆட்சி அதிகாரத்தைத் தமது தரப்பு எப்படியும் கைப்பற்றி விடவேண்டும் என்ற அவாவினால், பேரினவாதிகளைக் கூட்டுச் சேர்த்து, அவர்களுடன் சேர்ந்து ஆட்சியைப் பிடித்தார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

அவரது அந்தச் செயற்பாட்டினால், அமைதி முயற்சிகளை எதிர்க்கின்ற சிங்களப் பேரினவாதிகளும், தீவிரவாதிகளும் இன்று ஆட்சிப் பீடத்தை அலங்கரிக்கும் அவல நிலைமை இலங்கைத் தீவுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

பேரினவாதிகளோடு சேர்ந்து அமைக்கப்பட்ட ஆட்சி, அமைதி முயற்சிகளை முன்னெடுக்கமுடியாது அல்லாடுவது ஒருபுறமிருக்க, ஆட்சியில் நிலைபெறுவதற்குக் கூட நாடாளுமன்றப் பெரும்பான்மைப்பலம் இல்லாமல் தள்ளாடியது.

ஆனால், அப்படி தள்ளாடி இன்றோ, நாளையோ கவிழும் என்றிருந்த - பேரினவாதிகளையும் சேர்த்து அமைக்கப்பட்ட - கூட்டரசுக்கு முண்டுகொடுத்து அதை நிலைநிறுத்தியிருக்கின்றது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்.

விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் புலிகளோடு அரசு பேச்சு நடத்தவேண்டும் என்பதை வெளிப்பகட்டுக்கு ஒரு கோரிக்கையாக முன்வைத்துக்கொண்டு, அரசுப் பக்கம் இ.தொ.கா. 'பல்டி' அடிதது என்றாலும், அந்த வழியில் அரசு ஓரடி கூட முன்நகரவில்லை; ஆட்சிக்கு முண்டுகொடுத்த இ.தொ.காவினாலும் அரசை அந்த வழியில் முன்நகர்த்த முடியவில்லை

சமாதானப் பேச்சுகளுக்கு இணங்கி வராத - இணங்கி வரமுடியாத - நிலையில் பேரினவாதிகளை அரவணைத்துக் கொண்டுள்ள - இந்த அரசு, ஆரம்பத்தில் தன்னை நிலைநிறுத்தமுடியாது, தள்ளாடியது. இ.தொ.காவின் 'பல்டி' காரணமாக அதுபலம் பெற்று தனது ஆட்சி அதிகாரக் காலை செம்மையாக ஊன்றியிருக்கின்றது.

ஆக, பேரினவாதப் போக்கு அரசை நிலைநிறுத்தி, பலமடையச் செய்ததைத் தவிர இ.தொ.கா 'பல்டி'யால் விளைந்த நன்மை வேறேதும் இல்லை. இந்தப் பின்னணியில் தான் தென்னிலங்கையில் சமாதான விரோதச சக்திகள் பலமடைகின்றன என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கூறிய கருத்தை நோக்கவேண்டியிருக்கின்றது.

இனப்பிரச்சினை யுத்தம் ஏற்படுத்திய அழிவுகள் மிக மோசமானவை. இந்த யுத்தத்தால் அதிகம் பாதிக்கப்பட்டது தமிழர் தாயகமான வடக்கும் - கிழக்கும் தான். அதற்காக நாட்டின் ஏனைய பகுதிகள் பாதிக்கப்படவில்லை என்று அர்த்தமல்ல.

வடக்கு - கிழக்கில் வெடித்த யுத்தம் தென்னிலங்கையின் காலடிக்கும் வந்து சேர்ந்த போதுதான் அமைதி வழியில் - சமாதான முறையில் - இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்ற 'ஞானம்' சிங்களத்துக்குப் பிறந்தது.

யுத்தநிறுத்தமும், புரிந்துணர்வு உடன்பாடும், அமைதி வழித் தீர்வுக்கான தேடலும் அதன் பின்னர் தான் சாத்தியமாகின.

இந்த யுத்தநிறுத்தம், அமைதிநிலை ஆகியவற்றின் லாபத்தை (Peace Dividend) தென்னிலங்கைச் சிங்களம் தான் அதிகம் அனுபவத்துக் கொண்டிருக்கிறது

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தைப் பொறுத்தவரை யுத்தநிறுத்தத்தால் போர் ஓய்வையும், உயிரிழபபு, உடல் பாதிப்புகள், உடைமை இழப்புகள், ஆகியவை இல்லாமல் போனதையும் தவிர வேறெந்த நன்மையும் கிட்டவில்லை.

தாராளமாகக் கிட்டும் யுத்தநிறுத்தத்தின் இலாபமும் அதனால் ஏற்பட்ட வழமையான சொகுசும் பழையவற்றை சிங்களத்துக்கு மறக்கச்செய்துவிட்டன. திமிர்த்தனத்தோடு விடயங்களை அனுகவும், சமாதான விரோத சக்திகள் எழுந்து நின்று கூத்தாடவும் வாய்ப்பான சூழலை அதுதான் தந்துள்ளது.

எனவே, யுத்தமின்றி - அமைதி முயற்சிகள் ஆரம்பிக்கப்படாமல் - நிலைமை தொடர்ந்தும் இழுபடுமானால் இப்படி சமாதான விரோதிகள் பலமடைவதைத் தவிர்க்கமுடியாது என்பதே யதார்த்தம்.

# ஐக்கிய நாடுகள் தினத்தையொட்டி யாழ்.பொதுநூலகத்தில் கண்காட்சி

## 25ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை

யாழ்ப்பாணம்,ஒக்.22

ஐககியநாடுகள் தினத்தை முன்னிட்டு யாழ்.அரச அதிபருடன் இணைந்து ஐக்கிய நாடுகள் சபை நடத்தும் கண்காட்சி ஒன்று எதிர்வரும் 25.ஆம் திகதிமுதல் 31 ஆம் திகதிவரை யாழ்.பொதுநூலகத்தில் நடைபெறுகிறது.

ஐக்கியநாடுகள் சபையின் யாழ். வதிவிடப்பிரதிநிதி கெய்சுகி முறாட்டா தலைமையில் நடைபெறும் இந்தக் கண்காட்சியில் யாழ்.மாவட்டத்திலுள்ள ஐ.நா. நிறுவனங்களின் செயற்பாடுகள், ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகள் தொடர்பான ஆவணங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

ஐ.நா.சபை தினத்தைக் கொணடாடும வைபவம் எதிர்வரும் 25.ஆம் திகதி காலை 10.30 மணிக்கு யாழ்.பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் ஆரம்பமாகும். வரவேற்புரையினை ஐ.நாவின் யாழ். வதிவிடப் பிரதிநிதி நிகழ்த்துவார். தொடர்ந்து ஐ.நா.சபை செயலாளர் நாயகத்தின் வாழ்த்துச் செய்தி வாசிக்கப்படும். அதன்பின்னர் யாழ்.அரச அதிபர் எஸ்.பத்மநாதன், யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா ஆகியோர் சிறப்புரையாற்றுவார்கள்.

அதனையடுத்து யாழ்.மாவட்டத்தில் உள்ள ஐநாநிறுவனங்களின் பிரதிநிதிகள் தமது செயறபாடுகள் தொடர்பான கருத்துரைகளை வழங்குவார்கள்.

பின்னர் கண்காட்சி திறந்துவைக்கப்படும. கண்காட்சியில் வைக்கப்படும் ஆவணங்கள் கண்காட்சி முடிவில் யாழ் பொதுநூலகத்துக்கு வழங்கப்பட்டு அங்கு ஐ.நா.சபை தொடர்பான சகல தகவல்களையும் பெறுவதற்கான தனியான பிரிவு ஒன்று உருவாக்கப்படும் எனக் கண்காட்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (8)

# இரண்டாம் தொகுதிப் பட்டதாரிகளுக்கான பயிற்சி நெறி நேற்று ஆரம்பமானது

யாழ்ப்பாணம்,ஒக்.22

வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரச திணைக்களங்களில் பயிற்சி அளிக்கும் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட இரண்டாம் தொகுதி பட்டதாரிகளுக்கான பயிற்சி வழங்கும் ஆரம்பநிகழ்வு நேற்றுக் காலை 10.30 மணியளவில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்ப்பாணம், தீவகம் பகுதிகளைச் சேர்ந்த பட்டதாரிகள் கலந்துகொண்டனர்.

மங்கள விளக்கேற்றல் நிகழ்வுடன் ஆரம்பமான மேற்படி நிகழ்வில் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, யாழ்.மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா, காரைநகர் உதவி அரச அதிபர் க.சிறிமோகனன், யாழ்செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.பிரதீபன், நல்லூர் பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம், யாழ்.பிராந்திய ஆணையாளர் திருமதி சிவலிங்கம் மற்றும் யாழ். மாவட்ட பட்டதாரிகளின் பயிற்சித் திட்ட இணைப்பாளர் கே.கனகரட்ணம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் பயிற்சித் திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகளுக்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அனுப்பி வைத்த ஆசிச் செய்தியினை யாழ்பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் வாசித்தார்.

தொடர்ந்து மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா,யாழ்.மாவட்ட மேலதிக அரசஅதிபர் ஆசிவசுவாமி, யாழ்பிராந்திய ஆணையாளர் திருமதி சிவலிங்கம் ஆகியோர் சிறப்புரையாற்றினர். (8-13)



நிகழ்வில் யாழ்ப்பாண பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் உரையாற்றுவதையும் பிராந்திய ஆணையாளர் திருமதி சிவலிங்கம், நல்லூர் பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம், யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் பயிற்சித்திட்ட இணைப்பாளர் கே.கனகரட்ணம், யாழ்.செயலக உதவித் திட்டப்பணிப்பாளர் எஸ்.பிரதீபன், காரைநகர் உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதனையும் நிகழ்வில் கலந்துகொண்ட பட்டதாரிகளையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: வசந்தன்)*

# வீரப்பொதுமக்கள் விருதுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

கொழும்பு,ஒக்.22

கொழும்பில் உள்ள வீரப்பொதுமக்கள் மன்றத்தினால் இந்தஆண்டுக்கான 'வீரப்பொதுமக்கள்' விருதுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தமது உயிரைப் பற்றிக் கவலைப்படாமல் தாமாகவே முன்வந்து பிறருடைய உயிரைக் காப்பாற்றுவதற்காகத் தமது உயிரைப் பணயம் வைத்துக் காப்பாற்றுவோரைக் கௌரவிப்பதற்காக உருவாக்கப்பட்டதே வீரப்பொதுமக்கள் மன்றமாகும்.

பிறர் உயிர் வாழ்வதற்கு உதவுவது, விபததுக்குள்ளானோரைக் காப்பாற்றுவது போன்ற விடயங்களில் துணிவுடன் செயற்படுவோருக்கு ஆண்டு தோறும் இந்த மன்றத்தினால் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதன்படி இந்த ஆண்டுக்கான விருதுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. ஆபத்துக்கு அல்லது விபத்துக்கு உட்பட்ட ஒருவரின் உயிரை அல்லது உடைமைகளைத் தமது உயிரைப் பணயம் வைததுக் காப்பாற்றிய அல்லது காப்பாற்ற முடியாமற்போன ஆண்,பெண் இருபாலாரும் இந்த விருதுக்கு விண்ணப்பிக்கலாம்.

இதுவரை காலமும் வடக்கு - கிழக்குப் பகுதிகளிலிருந்து எவரும் விண்ணப்பிக்கவில்லை. இம்முறை இப்பகுதிகளில் இருந்தும் விண்ணப்பங்கள் கிடைக்க வேண்டும் என்று அமைப்பாளர் தெரிவித்தார்.

இவர்களுக்கு வீரப்பொதுமக்களுக்கான வீரதங்க இலச்சினையுடன் கூடிய தங்கப் பதக்கமும், வீரப்பொதுமக்கள் வீரஏழு நட்சத்திர விருதும் வழங்கப்படவுள்ளன.

இந்தஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நடைபெற்ற சம்பவங்களாக இருக்கவேணடும். உரிய சம்பவம் உண்மையானது என்பதை உறுதிப்படுத்தக் கூடிய தகவல்களை வழங்கவேண்டும். வீரதீரச்செயலைச் செய்தவர் அல்லதுசெயலுக்கு உட்பட்டவர் அல்லது சம்பவம் தெரிவித்தவர் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை அனுப்புவோர் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம திகதிக்கு முன்பு ககன் பி.சந்திரத்ன, தலைவர், வீரப்பொதுமக்கள் மன்றம், சியாசி, இல.290/292, ஆர்.ஏ.டிமெல் மாவத்தை, கொழும்பு - 03 என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (10)

### உதயவாக்கு

உண்மையான பக்தனுக்கு உலகப்பொருள் எதுவும் தேவையில்லை.

### நாளை

ஐப்பசி 07
சனிக்கிழமை
(23.10.2004)
திதி: தசமி
பிற்பகல்: 12.57 வரை.
நட்சத்திரம் : அவிட்டம்
பிற்பகல் 2.06 வரை
கேதாரகௌரி விரத ஆரம்பம்
விஜயதசமி
சுபநேரம் : 03.02 - 04.32
ராகுகாலம் : 09.02 - 10.32
(பழைய நேரப்படி)

# விண்ணப்பம் செய்த பட்டதாரிகளில் பதில் கிடைக்காதோர் தொடர்புகொள்க

வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பித்த வேலையற்ற பட்டதாரிகளில் இதுவரையில் உரிய பதில் கிடைக்காதவர்கள் நிதியமைச்சில் உள்ள மேன்முறையீட்டு அலுவலகத்துடன் தொடர்புகொள்ள முடியுமென்று நிதிஅமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றில் அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார். வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் அரசின் திட்டத்துக்கு தற்பொழுது தொழில்புரிந்து வருவோரும் விண்ணப்பித்துள்ளதாகக் குறிப்பிட்ட அமைச்சர் தற்பொழுது பயிற்சி பெற்றுவரும் பட்டதாரிகள் அனைவருக்கும் பயிற்சியின பின்னர் நிரந்தர வேலைவாய்ப்பு வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். விண்ணப்பம் செய்திருந்த 41 ஆயிரம வேலையற்ற பட்டதாரிகளுக்கு தற்பொழுது பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அரச ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு முன்பு வசேட பயிற்சிகள வழங்குவது நடைமுறையில் உள்ளமையால் அவ்வாறான பயிற்சியே தற்பொழுது வழங்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.(10)

## விக்னா கல்வி நிறுவனத்தின் வெள்ளிவிழாவும் மலர் வெளியீட்டு அழைப்பும்

இடம் : வீரசிங்கம் மண்டப கேட்போர் கூடம்
திகதி : 2004 ஐப்பசி 24 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : காலை 9.30 மணி (புதிய நேரம்)
பிரதம விருந்தினர் : கலாநிதி குணராசாவும்
(யாழ். மாநகரசபை ஆணையாளர்)
அவர் தம் பாரியாரும்
தலைவர்: லயன் திரு. மு.ஜெயந்திக்குமார்
(அதிபர், விக்னா கல்வி நிறுவனம்)
சிறப்பு விருந்தினர்: திரு.சிவமகாலிங்கம்
(இந்து சமய விவகார அலுவலக உதவிப் பணிப்பாளர், யாழ்.)
திரு.செ.செழியன்
(யாழ். நல்லூர் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர்)

மலர் வெளியீட்டு வைபவமும் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். மேற்படி நிகழ்வில் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பிக்குமாறு மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், தனியார் கல்வி நிறுவன இயக்குநர்கள், நலன்விரும்பிகள் என அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

52, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (சி-38466)(34-43-11-45)

வெள்ளிவிழாச் சபை,
விக்னா கல்வி நிறுவனம்.


## கலந்துரையாடல்

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் விடுதியில் இருந்து வெளியேறியுள்ள முதலாம், இரண்டாம் வருட முகிழ்நிலை ஆண் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

மலசல கூட மீள் திருத்த வேலைகளுக்காக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் விடுதிகளில் இருந்து வெளியேறிய அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (4-7)

## தேர்தல் சீர்திருத்த கலந்துரையாடல்

தேர்தல் சீர்திருத்தச் சட்டம் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ் செயலகத்துக்கு அருகில் அமைந்துள்ள வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் மதகுருமார்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பல்கலைக்கழக சமூகத்தினர் ஆகியோர் உட்பட சுமார் 50பேர் கலந்து கொள்ளவுள்ளதாக ப.்.வ்ரல் அமைப்பின் யாழ். மாவட்ட இணைப் பாளர் எஸ்.பி.நிர்மானுசன் தெரிவித்துள்ளார். (10)

## மின்சாரசபை தலைவர் யாழ்.வருகிறார்

இலங்கை மின் சாரசபையின் தலைவர் ஆனந்த குணசேகரா இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

இன்று காலை விமானம் மூலம் பலாலிக்கு வரும் அவர் அங்கிருந்து சுன்னாகத்தில் உள்ள மின்பொறியிலாளர் யாழ். பிராந்திய அலுவலகத்திற்குச் செல்வார். அதன் பின்னர் காலை 9மணிக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கை மின்சாரசபையின் வடபிராந்திய அலுவலகத்திற்குச் சென்று அங்கு நடைபெறவுள்ள நவராத்திரி நிகழ்வுகளிலும் கலந்து கொள்வார். யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதனையும் அவர் சந்திக்கவுள்ளார் என்று வடபிராந்திய மின்சாரசபையின் யாழ்.மாவட்ட முகாமையாளர் எஸ்.கமலநாதன் தெரிவித்தார். (4-7)


OPENING SOON
COMING HOLLYWOOD MOVIES
AT
Nathan's Cinema
Jaffna




வெகு விரைவில்....
யாழ். திரைப்பட ரசிகர்களுக்கு
ஹொலிவுட் திரைப்படங்கள்
திரையிடப்படவுள்ளன
நாதன்ஸ் சினிமா
யாழ்ப்பாணம்






## 14ஆம் ஆண்டு நினைவலைகள்

வீரஜனனம் 16 - 05 - 1974
வீரச்சாவு 22 - 10 - 1990



### வீரவேங்கை நிர்மலன்
### தியாகராஜா ரஜீவன்

எங்கள் அன்பு மகனே வேலவனே
நீ எரிந்து நீறாகி விட்டாயா?
இல்லையடா நினைவாகியுள்ளாய்!
நீ காற்றாகிக் கரைந்து போய்விட்டாயா?
இல்லையடா காவியமாகி விட்டாய்!
வேங்கைகள் என்றும் தூங்குவதில்லை
விடுதலையைத் தவிர
வேறு எதற்கும் ஏங்குவதில்லை!
மாவீரர்களே உமை நாம் மறவோம்.

கோண்டாவில் வீதி,
கோப்பாய் தெற்கு. (37848)(26-43-11-45)

- பெற்றோர்.



## பதினான்காம் ஆண்டு நினைவலைகள்

அன்னையின் மடியில்: 17 07 1960
திதி:(தசமி) 22 10 2004
ஆண்டவன் அரவணைப்பில்: 28 09 1990




அமரர் கந்தையா ஜீவரட்ணம்
(குமார்) (மினிபஸ் சாரதி)

திருமதி சுமதி ஜீவரட்ணம்

C38463

காவியமாய் நீங்கள் ஆகி பதினான்கு ஆண்டுகள்
காற்றாய் விரைந்து சென்றே கதையாகி
காதகர் செய்த வினைப் பலனை எண்ணி
காரிருள் சூழ்ந்ததாய் கலங்கியே வாழ்கிறோம்.

இல.7,சென்.மேரிஸ் 2 ஆம் ஒழுங்கை, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவோடுநிதம் வாழும்:ஐயா,அம்மா,சகோதர, சகோதரிகள், மைத்துனர், மருமக்கள்.



கொழும்புக்கு மிக அருகில் அழகான ஒரு வீடு
உண்மையில் ஒரு பொருண்மிய நட்பார்ந்த சூழல்

ஜாஎல/எக்கலவில்
(கட்டுநாயக்க விமானநிலையத்திற்குச் சமீபமாக)

வீடுகளின் விலைகள்
ரூ.2 மில்லியனிலிருந்து அதிகரிக்கும்.





சகல வசதிகளும் உண்டு

தொடர்பு:
2292930

யாழ்ப்பாணத்தில் வீடு விற்பனையை மேம்படுத்துவதற்கான முகவர் ஒருவர் தேவை. விரும்புபவர் மேற்காணும் தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளவும்.

(37855) UTHAYAN Graphics



## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 2924815 இலிருந்து
2942610 வரை

சீட்டிழுப்பு இல. 1549
திகதி 20.10.2004

வெற்றி எண்கள்
01 12 15 39 50

போனஸ் எண் 20

ஜக்பொட் பரிசு ரூபா.32,23,100/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத்தொகை |
|---|---|---|---|
| 5 | - | 23,82,100/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4 | 103 | 10,000/- | 10,30,000/- |
| 3 | 5,561 | 500/- | 27,80,500/- |
| 2 | 92,656 | 20/- | 18,53,120/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 01ம் எண் (போனஸ் எண் தவிர்ந்து) | 1,13,795 | 10/- | 11,37,950/- |

இந்த சனிக்கிழமை ஜக்பொட்
Rs. 40,99,200/-

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ. 77,01,570/-

தொடர் இல. 3872522 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுக்கள் 2004 ஒக்டோபர் 23 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

சனிக்கிழமை அதிர்ஷ்டச் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகை, தையல் இயந்திரம் மற்றும் பைசிக்கிளை வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2928968-4-69
2939947-8-40
2933565-4-12
2938119-4-10
2931869-1-19

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.



நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக ஸ்ரீகாந்த், ஸ்னேகா மற்றும் பலர் நடிப்பில்



போஸ் (சீனிமா) காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00. (பு.நே)

(C-37740)



சித்தி சினிமா பண்டத்தரிப்பு

விஜய், ஜோதிகா, கிரண் நடிப்பில்
திருமலை (ரீல்ஸ)
காட்சிகள் தினசரி: 3.00, 7.00
சனி, ஞாயிறு 11.00, 3.00, 7.00 (பு.நே)
23ஆம்திகதி முதல
இதயக்கன்னி



(சி-37902)



நிமலஞ்சனாஸ் சங்கானை

அர்ஜுன் நடித்த
அரசாட்சி (ரீல்ஸ்)
NUTTY PROFESSOR-2

காட்சி நேரம்:
11.00, 2.45, 6.00
(புதியநேரம்)
வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.45 பு.நே.

(சி-37951)



ராஜா யாழ்ப்பாணம்

இப்பொழுது இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக
ரவிகிருஸ்ணா, சோனியா அகர்வால் நடிப்பில்
7/G ரெயின்போ காலனி (ரீல்ஸ்)
காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ரிக்கெட் முற்பதிவு செய்துகொள்ளலாம். (சி-38041)



## தவறிவிட்டது

21.10.2004 இல் திருநெல்வேலிச் சந்திக்கும், பரமேஸ்வராச் சந்திக்கும் இடையில் NPGZ 8892 இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் ஆவணப் பொதி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு தொடர்புகொள்ளவும்.

செல்வா எலெக்ரிக்கல்ஸ்,
இல.62,பலாலி வீதி,
திருநெல்வேலி.
T.P.:021 4590524 (37860)



## கண்ணீர் அஞ்சலி

எமது சபையின் சக ஊழியர்
அமரர்
### இராசையா கனகலிங்கம்



அவர்கள் அகாலமானசெய்தி கேட்டு வலிகாமம் வடக்கு பிரதேச சபை ஊழியர் நலன் புரிச்சங்க உத்தியோகத்தர்கள், ஊழியர்களாகிய நாம் பெரும் துயரடைகின்றோம். அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
வலிகாமம் வடக்கு பிரதேசசபை,
காங்கேசன்துறை.

(சி-38474) (43-11-45)

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# கண் சிகிச்சைக்காக வீரப்பனை அதிரடிப்படையே அழைத்து வந்ததா?

ஸ்கொட்லாந்து பொலீஸுக்கு இணையாகப் பேசப்பட்ட தமிழகப் பொலீஸின் 'இமேஜ்' பல்வேறு விவகாரங்களால் அதலபாதாளத்துக்குப் போய்க்கொண்டிருக்க... 'வீரப்பன் ஒப்பரேஷன்' அந்தச் சரிவையெல்லாம் நொடிப்பொழுதில் சரிக்கட்டி, தமிழகப் பொலீஸை மறுபடி நெஞ்சு நிமிர வைத்திருக்கிறது.

ஒக்ரோபர் பதினெட்டாம் திகதி நடந்து முடிந்த நள்ளிவு ஒப்பரேஷனில் சந்தனக் கடத்தல் வீரப்



வீரப்பனின் கடைசிக் காட்சி....

பன், சேத்துக்குளி கோவிந்தன், சந்திரகௌடா, மற்றும் (தமிழர் விடுதலைப் படையை சேர்ந்த) சேதுமணி ஆகியோர் சல்லடையாக சுட்டுக்கொலலப்பட்ட சம்பவம் மறுக்கவே முடியாத மகத்தான சாதனைதான்.

கடந்த திங்கட்கிழமை இரவு நாடே உறங்கப்போன நேரத்தில் 'வீரப்பன் சுட்டுக்கொல்லப்பட்டான்' என்கிற அந்த செய்தி தர்மபுரி பகுதிகளில் பரவியபோது, 'அது கனவா... அது நிஜமா...?' என்று ஆயிரம் ஆயிரம் கேள்விகள் எழுந்தன. சுட்டுக்கொல்லப்பட்ட நால்வரின் சடலங்களையும் அதே இரவில் தர்மபுரி அரச மருத்துவமனைக்கு அதிரடிப்படை கொண்டுவந்து போட்டபோதுதான் நடப்பது கனவல்ல நிஜமென்று புரிந்தது!

பீறிட்டுக் கிளம்பிய ரத்தத்தின் சூடு அடங்காத நிலையில், நால்வரின் சடலங்களையும் கிடத்திவிட்டு நிமிரக்கூட நேரமில்லை அதிரடிப்படை அதிகாரிகளுக்கு! 'எப்படி சாதித்தீர்கள் இதை?' என்று துளைத்தெடுத்துவிட்டனர் பத்திரிகையாளர்கள்.

அப்போது அதிரடிப்படை அதிகாரி ஒருவர் சொன்னதை அப்படியே இங்கு தருகிறோம்.

"வீரப்பன் நடமாட்டத்தை தீவிரமாகக் கண்காணித்து வந்தார் அதிரடிப்படையின் உளவுப் பிரிவு எஸ்பியான செந்தாமரைக் கண்ணன். சிகிச்சைக்காக வீரப்பன் காட்டைவிட்டு நகரத்துக்கு



வழிமறித்த லொறி...



அந்த அம்புலன்ஸ்

அடிக்கடி வந்துபோகிறான் என்ற தகவல் அவருககுக் கிடைத்தது. 'பெண்ணாகரம் காட்டில் தற்போது நடமாட்டம் கொண்டுள்ள வீரப்பனும் அவனது சகாக்களும் பாப்பராப்பட்டி வழியாக தர்மபுரியில் உள்ள ஒரு மருத்துவரிடம் அம்புலன்ஸில் வந்து சிகிச்சை எடுத்துவிட்டுப் போகின்றனர்' என்றும் உறுதியான தகவல் கிடைக்க, உஷாரானது அதிரடிப்படை. கடந்த ஒரு மாதமாக பெண்ணாகரம் காட்டிலிருந்து தர்மபுரிக்கு வரும் எல்லாச் சாலைகளையும் கடுமையாக உளவு பார்த்தபோது, இந்த அம்புலன்ஸ் பயணத்துக்கு வீரப்பன் வழக்கமாக தேர்ந்தெடுத்த நேரம் இரவு பத்து மணி என்பது தெரியவந்தது.

காட்டுப் பகுதியிலிருந்து வெளி வந்து வான் பயணம் செய்வது, சரியாக ஒரு மணி நேரம் என்பதைக் கணக்கிட்டோம்.

நமது அதிரடிப்படை நான்கு 'ரீம்'களாக களமிறங்கியது. பாப்பாரப்பட்டியை அடுத்து ஏழாவது கிலோ மீற்றரில் செல்லியம்பட்டி கிராமத்துக்கு உட்பட்ட செக்கோடி என்கிற இடத்தில் சென்றி அமைத்து, வீதியின் இரு பக்கத்திலும் மறைந்து நின்றது அணி.

அந்த இடத்திலிருந்து தர்மபுரிக்கு ஏழு கிலோ மீற்றர். அதேபோல் பாப்பாரப்பட்டியிலிருந்து பைபாஸ் வழியாக சேலம் செல்லும் வீதி, பாலககோடு செல்லும் வீதி பாப்பாரப்பட்டி - பெண்ணாகரம் வீதியில் இன்னொரு 'பொயிண்ட்' என நான்கு இடங்களை ரகசியமாக 'செலக்ட்' செய்தது.

ஒவ்வொரு இடத்திலும் லொறியில் மணல் மூட்டைகள் அடுக்கி, மேலே தார்பாய் கட்டி கூண்டு போல் அமைத்து, அந்த லொறி ஏதோ கோளாறு காரணமாக வழியில் நிற்பது போல் 'செற் - அப்' செய்து வைத்திருந்தோம். லொறியில் அதிரடிப்படை வீரர்கள் பதுங்கி இருந்த



சந்திரகௌடா சேத்துக்குளி கோவிந்தன் சேதுமணி

னர். இதே 'செற்-அப்'தான் நான்கு இடங்களிலும்!

திங்கட்கிழமை இரவை இந்த ஒபரேஷனுக்கு தேர்தெடுத்து, மேற்சொன்ன தயார்நிலையில் இருந்தோம். வழக்கத்தைவிட, சற்று தாமதமாகவே வந்தது அம்புலன்ஸ், அது ஒரு 'ரெம்போ ட்ராவலர்' வேன்.... 'அம்புலன்ஸ்' என்று கொட்டை எழுத்துக்களில் எழுதியிருக்க... மேலே நீல நிற விளக்கும் சுற்றிக் கொண்டிருந்தது. அம்புலன்ஸை நிறுத்தி அவசர நோயாளிகளை பொலீஸ் சோதிக்காது என்ற தைரியம் அவர்களுக்கு.

## 'வீரப்பன் ஒப்பரேஷன்' பற்றி வெளியாகும் பரபரப்புத் தகவல்கள்

அந்த வண்டி செல்லியம்பட்டி கிராமம் செககோடி 'பொயிண்'டை நோக்கி நகர்ந்து வர... தூரத்தில் இருந்தே அதைப் பார்த்துவிட்டு, அதிரடிப்படை நிறுத்தி வைத்திருந்த மணல் லொறியை மெதுவாக றோட்டின் குறுக்கே கொண்டுவந்தோம். அம்புலன்ஸ் வேகம் குறைந்து தயங்கியது. அந்த கும்மிருட்டில் சாலையின் வலது பக்கம் 'செவன்த் டே மெட்ரிக்' பள்ளிக் கட்டடம் இருக்கிறது. அந்த மேல்பகுதியிலும் அதிரடிப்படை பதுங்கியிருந்தது. சுற்றிலும் மரங்களின் பின்பகுதியிலும் பதுங்கியிருந்தது அதிரடிப்படை.

அம்புலன்ஸ் வான் அருகில் வந்து மேற்கொண்டு நகர முடியாமல் ஒரு கட்டத்தில் நின்றுபோனதும், மைக் மூலமாக, 'வீரப்பா, சரணடைந்துவிடு' என்று எச்சரிக்கை செய்தது அதிரடிப்படை. அப்போது தான் இடைஞ்சல் லொறி என்பதே அதிரடிப்படையின் வேலை என்று சுதாகரித்துள்ளான் வீரப்பன். அம்புலன்ஸிலிருந்து அவனும் அவனது கூட்டாளிகளும் லொறியை நோக்கியும், சுற்றிலும் சுட ஆரம்பித்து விட்டனர்.

பதிலுக்கு அதிரடிப்படையும் அம்புலன்ஸை நோக்கி சரமாரியாகச் சுட ஆரம்பித்தது. எத்தனை கால கனவு இது! இவ்வளவு இலகுவாக அவன் சிக்கியபிறகு ஏமாற முடியுமா? இடைவிடாத குண்டுமழை பொழிந்தது அதிரடிப்படை. எதிர்த தரப்பிலிருந்து துப்பாக்கி முழக்கம் நின்று சிறிது நேரம் வரை காத்திருந்து விட்டு பிறகு தான் மெதுவாக அம்புலன்ஸைத் திறந்து பார்த்தனர் எங்கள் வீரர்கள். புகைமூட்டத்துக்கு நடுவே வீரப்பன், சேத்துக்குளி கோவிந்தன், சந்திர கௌடர் ஆகியோரோடு.... இதற்குமுன் அதிகம் வெளி உலகுக்குத் தெரியாத சேதுமணி ஆகியோர் இரத்த வெள்ளத்தில் கிடந்தனர்" என்றார் அந்த அதிரடிப்படை அதிகாரி.

மறுநாள் செவ்வாய் அன்று காலை பண்ணாரி அம்மன் கோயிலில் பளிச்சென்று மொட்டை போட்டுக்கொண்டு, முகம் நிறைய உற்சாகத்துடன் பத்திரிகையாளர் முன் வந்தமர்ந்தார் விஜயகுமார். அவரது சந்திப்பிலும் பிறகு வேறு சில அதிகாரிகளிடம் பேசியதிலும் நமக்கு தெரியவரும் விவரங்கள் வேறுமாதிரி!

வீரப்பன் பெண்ணாகரம் பகுதியில் நடமாடுகிறான் என்பதையும், ஏற்கனவே மாலைக்கண் வியாதி வந்து அவதிப்பட்டு, ஒரு கண்ணையே எடுக்க வேண்டி வந்தது என்பதையும் உறுதிப்படுத்திக் கொண்டது அதிரடிப்படையின் உளவுப்பிரிவு. அதையடுத்து, இன்னொரு கண்ணிலும் 'பொறை' விழுந்து இப்போது ரொம்பவே அவதிப்படுகிறான் என்பதையும், உடனடி சிகிச்சைக்காக ஏங்குகின்றான் என்பதையும் கண்டுபிடித்திருக்கிறது. அதைத் தொடர்ந்து அதிரடிப்படையின் அதிகாரிகளான உசேன், ராஜராஜன ஆகியோரையும் அதிரடிப்படைக்கு வெளியே பொலீஸ் வேலை பார்க்கும் வெள்ளத்துரை, பிரசன்னா ஆகியோரையும் அழைத்து அவர்களிடம் தனது திட்டத்தை விவரித்திருக்கிறார் விஜயகுமார். அதைத் தொடர்ந்து, இந்த நால்வரும் தனித்தனியே பிரிந்து சென்று, வீரப்பனின் நம்பிக்கைக்குரிய சிலரை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்கிறார்கள். தாங்கள் நினைத்த விஷயங்களையெல்லாம் இந்த நம்பிக்கைக்குரிய ஆள்கள் மூலம் வீரப்பனிடம் படிப்படியாக சொல்ல வைத்திருக்கிறார்கள்.

இதற்கிடையே, நான்கு மாதங்களுக்கு முன்பு சரவணன் என்ற அதிரடிப்படை வீரரை அழைத்து சில உத்தரவுகளை பிறப்பித்திருக்கிறார் விஜயகுமார். அன்றோடு சரவணன் அதிரடிப்படையை விட்டு 'காணாமல் போனார்'!

அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் வந்துவிட்ட நம்பிக்கையானவர்கள், "கண்ணில் 'பொறை'



உற்சாகத்தில் அதிரடிப்படை அணியினர்

விழுந்ததோடு கொஞ்சம் கொஞ்சமாக சீழ்பிடிககவும் ஆரம்பித்தது. இதை உடனே கவனிக்காவிட்டால் சுத்தமாக கண்ணை எடுக்க வேண்டியிருக்கும் என்று வீரப்பனிடம் சொல்லியிருக்கிறார்கள்.

"எப்படி நான் ஊருக்குள்ளே போய் கண் ஒப்பரேசன் பண்ணுகிறது?" என்று கேட்க.. "நமக்கு உதவி செய்ய ஆள் இருக்கு. சந்தர்ப்பம் பார்த்து ஒப்பரேசனுக்கு நாங்கள் ஏற்பாடு செயகின்றோம்" என்று கூறியிருக்கிறார்கள்.

இந்த விஷயங்கள் உடனுக்குடன் விஜயகுமார் காதுக்கு வந்து சேர, ஒக்ரோபர் பதினெட்டாம் திகதி ஒப்பரேசனுக்கு நாள் குறித்தாராம் அவர். அதன்படி அதிரடிப்படையே ஓர் அம்பு



பத்திகையாளர் மத்தியில் விஜயகுமார்...

லன்ஸ் வண்டியை தயார் செய்தது. வீரப்பன் நம்ப வேண்டும் என்பதற்காக, சேலத்தில் உள்ள எஸ்.கே.எஸ். மருத்துவமனையின் பெயரை ஒரு ஸ்டிக்கரில் எழுதி அந்த அம்புலன்ஸ் வண்டியில் ஒட்டியிருக்கிறது.

"தர்மபுரியில் தான் உனக்கு கண் ஒப்பரேஷன். ஆனால், அந்த ஊரில் வண்டி எடுத்தா விஷயம் லீக்காகிவிடும். அதனால் சேலத்தில் இருந்து அம்புலன்ஸ் வருகிறது. திங்கட்கிழமை இராத்திரி ஒன்பதரை மணிக்கு நீ தயாராக இரு" என்று நம்பிக்கையானவர்கள் மூலம் வீரப்பன் தயார்ப்படுத்தப்பட்டார்.

தமிழகத்திலிருந்து.....
**- இந்திரஜித் -**

உடம்பெல்லாம் சந்தேகம் கொண்ட வீரப்பன் "வெறுங்கையாக நம்பி அவ்வளவு தூரம் வரலாமப்பா?" என்று கேட்க, "அதுக்கென்ன... உன் கூட்டாளிகளையெல்லாம் கூட்டி, வேண்டிய ஆயுதங்களை எடுத்துக்கொள்" என்று தைரியம் சொலலியிருக்கிறார்கள்.

நான்கு மாதங்களுக்கு முன் காணாமற்போன சரவணன் தான் இந்த அம்புலன்ஸ் வண்டியின ட்ரைவர். திரும்பத்திரும்ப ஒத்திகை பார்த்துப் போட்டுக்கொடுத்த வழியை பளிச்சென்று மனதில நிறுத்தியபடி குறிப்பிட்ட இடத்தில் போய் அம்புலன்ஸை நிறுத்தியிருக்கிறார் சரவணன். சரமாரியான கேள்விகள் கேட்டு திருப்தியடைந்த பிறகு தான் வீரப்பன் கும்பல் வண்டியில் ஏறியிருக்கிறது.

ஏற்கனவே இவருக்குத் தரப்பட்டிருந்த 'இனஸ்ட்ரக்ஷன்' படி குறிப்பிட்ட பழைய பள்ளிக் கட்டடதின் எதிரில் அம்புலன்ஸ் வரும் போது மணல் மூடை அடுக்கிய லொறியை றோட்டுக்குக் குறுக்காகக் கொண்டுவந்தது காத்திருந்த 'ரீம்'. இவரும் நிஜமாகவே பதறுகிற மாதிரி நடித்துவிட்டு அம்புலன்ஸை பாதி றோட்டிலும் பாதி மண் பாதையிலுமாக நிறுத்திவிட்டு, மின்னல் வேகத்தில் குதித்து, இருளில் கலந்து பாதுகாப்பான இடத்தை அடைந்து விட்டார்.

மற்றதையெல்லாம் அதிரடிப்படையினரின் அக்ரோஷ 'ரீம்' பார்த்துக் கொண்டது!

வழக்கமான புசுபுசு மீசை இல்லாமல், சினிமா ஹீரோ கணக்காக வீரப்பன் 'கட்' செய்திருந்ததைப்பார்த்து முதலில் அசந்து விட்டதாம் அதிரடிப்படை. தலையில் 'கருகருவென்று' 'டை' வேறு அடித்திருந்தார். 'பொறை'முற்றிப் போய் ஒரு கண்ணே கிட்டத்தட்ட குழியாகும் அளவுக்கு உள்வாங்கியிருந்தது.

செவ்வாய் மதியம் நெருங்க நெருங்க வீரப்பன் சுடப்பட்ட விதம் பற்றி வேறுவிதமான கதைகளும் வெளியாகத் தொடங்கியுள்ளன.

"வீரப்பன் குறிப்பிட்ட அந்த திங்களன்று தான் வழிமடக்கி சுடப்பட்டான் என்பது சரியல்ல. பெரும பாடுபட்டு அவனை சில நாள்களுக்கு முன்பே வளைத்து விட்டார்கள். அவரிடமிருந்து அதிர்ச்சிகரமான பல ஆதாரங்களைப் பெற்றுக்கொண்டு, அதன் பிறகு அவரை வேறு இடத்திற்குக் கொண்டு செல்ல நினைத்தார்கள். பத்திரிகையாளர்களின் கண்ணில் படாமல் இதைச் செய்து முடிப்பதற்காகவே அம்புலன்ஸ் மூலம் கூட்டிச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

உதயன்
ஜி.சீ.ஈ. (சா.தரம்)
மாதிரிப்
பரீட்சைகள்
இல.14

# ஜி.சீ.ஈ.(சாதாரண தர) மாதிரிப் பரீட்சை - 2004

32 T II

# மாதிரி வினாப்பத்திரம் கணிதம் - II

**நேரம் 3 மணி** | **ஆசிரியர்: T.மயூரன்** | **புள்ளிகள் – 140**

★ முதலாம் வினாவுக்கும் வேறு ஏழு வினாக்களுக்கும் விடையளிக்குக. (முதல் வினாவுக்கு 42 புள்ளிகள் ஏனையவற்றுக்கு 14 புள்ளிகள் வீதம்)

**1)** (a)(i) $(11\frac{1}{9}x^2)^{1/2}$ இன் பெறுமானம் யாது?

(ii) $(2x+5)^2$ இன் விரிவை எழுதுக?

(iii) தீர்க்க: $2\log x=\frac{1}{2}\log 64-\log 2+2\log 3$


(b) பொது அறிவுப் பரீட்சை ஒன்றிற்கு வந்திருந்த மாணவர்களுள் 2/5 பங்கினர் சிங்களமொழி மூலமும், 1/4 பங்கினர் தமிழ்மொழி மூலமும், 1/6 பங்கினர் ஆங்கில மொழி மூலமும் ஏனையோர் வேறு மொழிகள் மூலமும் பரீட்சைஎழுதினர். எண்ணிக்கை 330 ஆயின்,
(1) வேறு மொழி மூலம் பரீட்சை எழுதியோரின் பின்னம் யாது?
(2) பரீட்சை எழுதியோரின் மொத்த எண்ணிக்கை யாது?
(3) தமிழ்மொழி மூலம் பரீட்சை எழுதியோரின் எண்ணிக்கையைத் தருக?

(c) கீழே தண்டு, இலை வரைபில் காட்டப்பட்டுள்ள தரவுகளைக்கொண்டு பரம்பலின்

| தண்டு | இலை |
|---|---|
| 10 | 0,0,5,5,5 |
| 11 | 0,0,0,0,5,5,5,5,5 |
| 12 | 0,0,0,0,0,5,5,5,5,5,5 |
| | 5,5,5,5 |
| 13 | 0,0,0,0,0,0,5,5,5,5 |
| | 5,5,5 |
| 14 | 0,0,0,5,5 |


(i) ஆகாரம் யாது?
(ii) இடையம் யாது?
(iii) அட்டவணை ஒன்றைத் தயாரித்து ஆகாரதகை உத்தேச இடையாகக் கொண்டு இடையைக் காண்க?

(d) படத்தில்




(i) $P\hat{R}Q$ இன் பருமன் யாது?

(ii) $P\hat{O}Q$ இன் பருமன் யாது?
(iii) PR இவ் வட்டத்தின் மையமாகுமா? காரணம் யாது?




(e) (i) நாற்பக்கல் ஒன்றின் ஒருசோடி எதிர்ப்பக்கங்கள் சமனும், சமாந்தரமும் ஆயின், அந்நாற்பக்கல் இணைகரம் ஆகும் என்னும் தேற்றத்தை நிறுவிக் காட்டுக?
(ii) இணைகரம் LMNO இன் பக்கங்களாகிய LM, MN, NO, OL என்பவற்றின நடுப்புள்ளிகள் முறையே P,Q,R,S ஆகும். PQRS ஓர் இணை கரம் என நிறுவுக?


(f) 1800cc கொள்ளளவு உடைய கார் ஒன்றிற்குப் பூரணக் காப்புறுதிப்பத்திரம் பெறும்போது ஒவ்வொரு ரூ.1000 இற்கும் வருடாந்தம் ரூ.50 செலுத்தவேண்டும். ஒவ்வொரு இழப்பீட்டு விண்ணப்பத்தின் போதும் ரூ.900 ஐ உரிமையாளர் பொறுப்பேற்பதாக ஒப்பந்தம் செய்துகொண்டால் தவணைப் பணம் 10% குறைக்கப் படும். இதற்கேற்ப ரூ. 600,000 இற்கு காப்புறுதி செய்யப்பட்ட காரிற்கு
(1) ஒப்பந்தப்படி குறைக்கப்படும் பணம் யாது?
(2) செலுத்தவேண்டிய தவணைப் பணம் யாது?

**2)** (a) தெற்கில் இருந்து வடக்கிற்குச் சுற்றுலா வந்த குழுவிலிருந்து பெறப்பட்ட தகவலல் இருந்து சுற்றுலாவில் கலந்துகொண்ட அனைவரும் சிங்களம் பேசுவர். 400 பேர் கொண்ட இக்குழுவில் 150 பேர் தமிழ்பேசுவர். 160 பேர் ஆங்கிலமும் பேசுவர். 120 பேருக்கு சிங்களம் தவிர வேறு எந்த மொழியும் தெரியாது?
(i) பொருத்தமான வென்வரிப்படம் ஒன்று வரைந்து அதிலே தரவுகளைக் குறிகக?
(ii) மூன்று மொழிகளையும் பேசத் தெரிந்தவர்களின் எண்ணிக்கையை x எனக் கொண்டு சமன்பாடு ஒன்று அமைக்குக?
(iii) x இன் பெறுமானம் யாது?
(iv) இருமொழிகள் மட்டும் பேசத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை யாது?

(b) குடும்பம் ஒன்றில் மூன்று பிள்ளைகள் உள்ளனர். இப்பிள்ளைகளில் ஆண், பெண இயல்தகவுகளைக்காட்டும் (1) மரவரிப்படம் ஒன்று வரைக? (2) இதில் இருந்து மூன்று பிள்ளைகள் தெரிவுசெய்யப்படும்போது அவர்கள் மூவரும் பெண் பிள்ளைகளாக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

**3)** (a) சூத்திரத்தைப் பயன்படுத்தி அல்லது வர்க்க நிறைவாக்கலின் மூலம் $x^2+4x-9=0$ இன் மூலங்களை கிட்டிய இரு தசமதானங்களுக்குக் காண்க?
(b) $V=4/3\pi r^3$ என்னும் சூத்திரத்தில் $V=89.64$, $\pi=3.12$ என இட்டு மடக்கை அட்டவணையின் உதவியுடன் r இன் பெறுமானம் காண்க?

**4)** (a)




உருவில் ABCD இணைகரத்தில் AB=4cm, QP=3 cm ஆகும். இதில் AB ஆனது ABயின் போக்கில் x cm அதிகரிக்கும்போது PQ ஆனது 2x cm குறைகின்றது.
(i) AB யின் புதிய நீளம் யாது?
(ii) PQ இன் புதிய நீளம் யாது?
(iii) இம்மாற்றத்தினால் உருவாகும் புதிய இணைகரப் பரப்பு y எனின் $y=12-5x-2x^2$ எனக்காட்டுக


(b) இணைகரப் பரப்பு $y=12-5x-2x^2$ இன் வரைபை $-4\leq x\leq 2$ என்னும் ஆயிடையில் அமைப்பதற்கு அட்டவணையைப் பூரணப்படுத்துக?

| x | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 |
|---|---|---|---|---|---|---|---|
| y | 0 | - | 14 | - | 12 | - | -6 |

(i) பொருத்தமான அளவிடையில் உமது. வரைபை வரைக?
(ii) உமது வரைபைப் பயன்படுத்தி
(i) இணைகரத்தின் உயர் பரப்பு யாது?
(ii) இணைகரத்தின் பரப்பளவிற்குச் சாத்தியமான x இன் பெறுமான வீச்சு யாது?
(iii) இணைகரப் பரப்பளவு $12cm^2$ ஆக இருக்கும் x இன் பெறுமானங்கள் யாது?

**5)** அருகில் காட்டப்பட்டுள்ள அமைப்பு வரிப்படம் ஆனது 7cm விட்டத்தையும் 21cm உயரத்தையும் உடைய ஓர் உருளை வடிவான பகுதியையும் 14cm ஆரையையுடைய ஓர் அரைக் கோளத்தையும் அதன் மையங்கள் ஒன்றோடு ஒன்று மேற்பொருந்துமாறு மருவி ஒட்டப்பட்ட ஓர் இரும்பு ஆணி ஆகும்.

a)





(i) கோளத்தின் வளைந்த பகுதியின் பரப்பளவு யாது?
(ii) உருளையின் வளைந்த பகுதியின் பரப்பளவு யாது?
(iii) வட்டப் பகுதிகளின் பரப்பளவு யாது?
(iv) இந்த ஆணியின் மொத்த மேற்பரப்பளவு யாது?
(v) இந்த இரும்பு ஆணிக்கு $1cm^2$ இற்கு செப்புமுலாம்பூச ஏறபடும் செலவு ரூ.3.25 எனின், இந்த ஆணிக்கு முலாம் பூசுவதற்கு ஏற்படும் மொத்தச்செலவு யாது?

b) i அரைக்கோள வடிவமான பகுதியின் கனவளவு யாது?
ii உருளை வடிவான பகுதியின் கனவளவு யாது?
iii ஆணியின் மொத்தக் கனவளவு யாது?
iv இந்த ஆணியின் $1cm^3$ இரும்பின் நிறை 2.6g எனின், இந்த ஆணியின் மொத்த நிறையைக் காண்க?

**6)** ஆண்டுதோறும் 12% பங்குலாபத்தைக் கொடுக்கும். "ரிஷ்மி" அன்ட் கம்பனியின் ரூபா 15பங்குகளை ரூபா 20 வீதம் கொள்வனவுசெய்யலாம்.
a (i) இக்கம்பனியின் ஒருபங்கின் பெயர் மாத்திரைப் பெறுமானம் யாது?
(ii) இக்கம்பனியில் பங்குகளைக் கொள்வனவுசெய்வதற்கு ரூபா 80,000 இடும் கண்ணன் கொள்வனவு செய்யத்தக்க பங்குகளின் எண்ணிக்கை யாது?
(iii) ஓர் ஆண்டின் இறுதியில் அவருக்குக் கிடைக்கும் பங்குலாபம் யாது?
(iv) ஆண்டுதோறும் r% பங்குலாபத்தைக் கொடுக்கும் ரூபா 10 பங்குகளை ரூபா x% கொளவனவு செய்வதற்கு ரூபா P ஐ முதலீடுசெய்யும் ஒருவருக்கு ஓர் ஆண டின் இறுதியில் ரூபா M இலாபமாகக் கிடைக்கிறது. M இற்கான சூததிரத்தை P, r, x இன் சார்பில் தருக?

**7)** கார் ஒன்றின் விற்பனை விலை ரூ600,000 ஆகும். உடன் காசுக்கு வாங்கும்போது 15% கழிவு கொடுக்கப்படுகின்றது. வாடகைக் கொள்வனவுமுறையில் வாங்கும்போது ரூபா 20,000 ஐ செலுத்தி மீதியைச் சம மாதக் கட்டணங்களாக 20 மாதங்களில் செலுத்தவேண்டும். அறவிடப்படும் வட்டிவீதம் 18% ஆகும்.
i உடன் காசுக்கு காரின் விற்பனை விலை யாது?
ii வாடகைக் கொள்வனவுமுறையில் வாங்கும்போது முதல் செலுத்தியபின் எஞ்சிய கடன் பணம்?
iii வட்டி கணிக்கப்படும் மாத அலகுகளின் எண்ணிக்கை?
iv ஒருமாத அலகுக்கான வட்டி எவ்வளவு?
v செலுத்தப்படும் மொத்த வட்டி எவ்வளவு?
vi வட்டியுடனான தவணைக் கட்டணம் ஒன்றின் பெறுமானம் யாது?


**8)** வைத்தியசாலை ஒன்றின் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக்காக வந்தவர்களின் வயதுகள் கிரள்மீடிறன் வளையியில் தரப்பட்டுள்ளன.




a i) நோயாளர்களின் வயதுகளின் இடையம் யாது?
ii இப்பரம்பலின் காலணை இடைவீச்சு யாது?
iii இப்பரம்பலில் அன்றையதினம் சிகிச்சைக்காக வந்த நோயாளர்களில் 30 வயதிற்கு மேற்பட்டோரின் சதவீதம் யாது?

(b) நேர்விளிம்பு, கவராயம், cm/mm அளவுசட்டம் ஆகியவற்றை மாத்திரம் பயன் படுத்தி, அமைப்புக்கோடுகள் யாவற்றையும் தெளிவாகக் காட்டி AB=8.5 cm, BC=5.5 cm, $A\hat{C}B=90$, CD=3.5cm ஆகவும் ABஆனது DCஇற்கு சமாந்தரமாகவும் இருக்கு மாறு நாற்பக்கல் ABCD ஐ அமைக்க. (*சாடைக் குறிப்பு:* AB ஐ விட்டமாகக்கொண்ட வட்டம் ஒன்றை அமைத்து, அரைவட்டத்தில் அமைந்த கோணம் செங்கோணம் என்னும் தேற்றத்தைப் பயன்படுத்துக).
(i) முக்கோணி ABC இன் உள்வட்டம் அமைக்க?
(ii) அதன் ஆரையை அளந்து எழுதுக?


**9)** (a)




நில அளவையாளர் ஒருவரால் நீர்த்தடாகம் ஒன்றின் பரப்பைக் காண்பதற்காக 1cm=10m என்னும் அளவிடைக்கு வரையப் பட்ட கிடைப்படம் அருகில் காட்டப்பட்டுள்ளது.
(i) இக்கிடைப்படத்தை வரைவதற்குப் பயன்படுத்தப்பட்ட வெளிக்களப் புத்தகக் குறிப்பை எழுதுக?
(ii) கிடைப்படத்தின் பரப்பளவை $cm^2$ இல் தருக?
(ii) தடாகத்தின் பரப்பளவை $m^2$ இல் எழுதுக?


b) விஞ்ஞானி ஒருவர் ஒரு நுண்ணங்கியின் வளர்ச்சி பற்றிய ஆராய்ச்சியின்போது முதலில் மூன்று நுண்ணங்கிகளைப் பரிசோதனைக்கு பரிசோதனைக் குழாயில் எடுத்தார். அது ஒவ்வொரு நாளும் முதல்நாள் அது இருந்த எண்ணிக்கையில் இரண்டுமடங்காக அதிகரிக்கின்றது.
(i) 9 ஆம் நாள் பரிசோதனைக் குழாயில் உருவாகும் நுண்ணங்கிகளின் எண்ணிக்கை யாது?
(ii) எத்தனை நாள்களின் முடிவில் பரிசோதனைக் குழாயில் உள்ள நுண்ணங்கிகளின் மொத்த எண்ணிக்கை 1533 ஆகும்?

**10)**




(a) அருகில் தரப்பட்டுள்ள உருவில் P,Q,S,T என்பன வட்டத்தில் உள்ள புள்ளிகளாகும். நீட்டப்பட்ட பக்கங்கள் PQ ,TS என்பன R இல் சந்திக்கின்றன.

$P\hat{R}T=Q\hat{S}T-S\hat{T}P$ என நிறுவுக?




(b) மடக்கை அட்டவணையின் உதவியுடன் x,h இன பெறுமானங்களைக் காண்க?

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

## காலத்தின் தேவை கருதி

# யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தின் மாபெரும் விஞ்ஞானக் கண்காட்சி-ஒக். 26-30

காலம் கடுகதியிலே பயணித்துக் கொண்டிருக்கின்றது. உலகம் எமது உள்ளங்கையிலே என்று சொல்லும் அளவுக்கு இன்று அறிவியலின் ஆதிக்கம் வலுவூன்றிவிட்டது. செத்தவனை உயிர்ப்பிப்பதைத் தவிர ஏனைய எதையும் சாதிக்க முடியும் என்னும் தன்னம்பிக்கையோடு விஞ்ஞானம் இன்று வீறுநடை போட்டுக் கொண்டிருக்கின்றது. அடுக்களையிலிருந்து அரசாங்கம் வரை இன்று அறிவியலிடமே மண்டியிட்டுக்கிடக்கின்றது.

ஆனாலும், எவ்வளவுதான் அறிவியல்துறைகள் முன்னேறினாலும் எமது தமிழர் தாயகப் பிரதேசங்களைப் பொறுத்தவரையிலே இம் முன்னேற்றங்கள் காலம் கடந்த பின்னரே எமது மண்ணை வந்தடைகின்றன. இதற்காக நாம் அறிவியல்துறை வளர்ச்சியிலே சளைத்தவர்கள் என எடைபோட்டுவிட முடியாது. இதனை நிரூபிக்கும் விதத்திலான விஞ்ஞானக் கண்காட்சியொன்று விஞ்ஞானபீடத்தின் 30ஆம் வருட நிறைவையொட்டி யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இக்கண்காட்சியானது மாணவர்கள், அறிவியல துறை சார்ந்தோர்களுக்கு மட்டுமன்றி சாதாரண பொதுமக்களும் பயன்பெறத்தக்க வகையிலே அமைக்கப்பெற்றுள்ளது.

கடந்த இருபது வருடகாலமாக நடைபெற்ற கொடிய போரின் காரணமாக எமது தாயக வளங்கள் பலவும் அடியோடு அழிக்கப்பட்டுவிட்டன. கல்வித்துறையை பொறுத்தவரையிலும் பல பின்னடைவுகளை எமது சமூகம் எதிர்கொண்டுள்ளது. ஆனாலும், எரிந்த சாம்பலில் இருந்து உயிர்க்கும் 'பீனிக்ஸ்' பறவைபோல என்றும் துளிர்விட்டுக் கொண்டேயிருக்கிறது எமது கல்வியுலகு. குறிப்பாக விஞ்ஞானபீடம். இதனை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீடக் கண்காட்சியை பார்வையிடும் எவரும் இலகுவாக உணர்ந்து கொள்ளமுடியும்.

எமது பிரதேச பாடசாலை மாணவர்கள் அதிகரித்துவரும் வளப் பற்றாக்குறைகளுடனேயே தமதுகல்வியைத் தொடர்ந்து வருகின்றனர். ஆய்வுகூட வசதிகள் அதிகமின்றி, அறிவியற்துறை கல்வியை தொடரும் எமது மாணவர்களின் நிலையோ அவலமானது.

எனவே, இத்தகைய நிலையில் உள்ள மாணவர்களுக்கு இக்கண்காட்சியானது மிகுந்த பயனுடையதாக அமையும் என்பது திண்ணம். ஜி.சீ.ஈ. (உ/த) வகுப்புகளில் கூட சரியான ஆய்வுகூட வசதிகள் இல்லாத பாடசாலைகள் ஏராளம் எமது மண்ணிலே உண்டு. எனவே, வெறும் கரும்பலகை கற்பித்தலின் மூலமாகவே எமது மாணவர்கள் தமது கல்விச சாதனைகளை புரியவேண்டியுள்ளது.

இந்நிலையில், இக்கண்காட்சியிலே பல பாடத்துறைகளையும் சார்ந்த பரிசோதனைகள் நேரடியாக செய்து காட்டப்படவுள்ளமையினால் அது எமது மாணவர்களுக்கு மிக்க பயனுள்ளதாகவே அமையும். அதுமட்டுமன்றி, பல்வேறு சூழலியல் பிரச்சினைகள் தொடர்பாகவும் இக்கண்காட்சியிலே ஆராயப்படவுள்ளமையானது பொதுமக்கள் மத்தியிலே விழிப்புணர்வை ஏற்படுத்தும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை. பயன்பல மிக்க இவ் விஞ்ஞானக்கண்காட்சியானது பின்வரும் துறைகள் ரீதியாகவே காட்சிப்படுத்தப்படவுள்ளது.

- ☆ தாவரவியற்றுறை
- ☆ விலங்கியற்றுறை
- ☆ இரசாயனவியற்றுறை
- ☆ பௌதிகவியற்றுறை
- ☆ கணனியியற்றுறை
- ☆ கணித புள்ளிவிபரவியற்றுறை மற்றும் இவற்றோடு இணைந்தவை
- ☆ மீன்பிடி டிப்ளோமா

மேலும் சிறப்பாக இக் கண்காட்சியில் எமது பிரதேச, தாயக வளங்களைப் பயன்படுத்தி எவ்வாறு சமூக முன்னேற்றத்தை அடைவது என்பதை நன்கு திட்டமிட்டு செயற்படுத்தியிருக்கிறார்கள் யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர்கள். எனவே, பல்வேறு பரிமாணங்களினூடாக நோக்கப்படுகின்ற இக் கண்காட்சியானது, நிச்சயமாக எமதுதாயக மாணவர்கள், கல்வியியலாளர்கள், பொதுமக்கள் என அனைத்து தரப்பினருக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பது வெள்ளிடைமலை.

கண்டறியத் துடிக்கும் இளைய கல்வி உள்ளங்களை உரிமையோடு தட்டிக்கொடுக்க வேண்டியது எமது சமூகத்தின் கடமையாகும். இந்த வரலாற்றுக் கடமையை எமது ஒவ்வொருவரது கரங்களிலும் நாம் ஏற்றிக்கொள்ள வேண்டும். இதற்காகவேனும் விஞ்ஞானபீடக் கண்காட்சியைப் பார்வையிட வேண்டியது அவசியமானதாகும்.

எம்மைச்சுற்றி நிகழும் எந்த நிகழ்வுகளும் அறிவியல் அர்த்தமின்றி நடப்பதேயில்லை. அந்த அர்த்தங்களை எம்மால் புரிந்துகொள்ள முடியாமலிருப்பதே இன்றைய பின்னடைவுக்குக் காரணம் அவற்றைப் புரிந்துகொண்டவர்கள் புயல் வேகத்திலே முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். இதுவே, மேலைத்தேயத்தின் இன்றைய வெற்றிக்கு காரணமாக விளங்குகிறது.

எமது தாயக வளங்களையும், நலன்களையும் கொண்டு தன்னிறைவு காணத்துடிக்கும் உள்ளங்களுக்கு இக்கண்காட்சி சிறந்த வழிகாட்டியாக அமையும் என்பது உறுதி. இக் கண்காட்சியை பார்வையிடும் எவரும் வெளியேறும் போதும நிறைவாகவே வெளியேறுவார்கள். வெளியேறும் உள்ளங்கள் அனைத்தும் சிந்திக்கத் தொடங்கினால் விடிவு என்பது அதிக தூரத்தில் இல்லை. இந்த சிந்தனையை தூண்டத்தக்க வகையிலேயே யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தினின் விஞ்ஞானக் கண்காட்சி அமையும் என்பதை இப்போதே உணரக் கூடியதாகவுள்ளது.

*வாருங்கள்! வந்து பாருங்கள்!! கல்வியில் முன்னேறுங்கள்!!!*

**- விஞ்ஞானநேசன்.**

## கண்காட்சி பற்றி....

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் மாபெரும விஞ்ஞானக் கண்காட்சி ஒன்று இம்மாதம் 26ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை நடைபெறுகிறது. இக்கண்காட்சி ஜி.சீ.ஈ.(உ/த), ஜி.சீ.ஈ.(சா/த) மாணவர்களின் அறிவு விருத்தியைப் பிரதான குறிக்கோளாகக் கொண்டது. இது காரணமாக 26ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரையான நான்கு தினங்கள் பாடசாலை மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 30 ஆம் திகதி பொதுமக்கள் பார்வைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. தினமும் காலை 9.00 மணிதொடக்கம் பிற்பகல் 3.00 மணிவரை பார்வையாளர்கள் கண்காட்சி மண்டபங்களுள் அனுமதிக்கப்படுவர். காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை கண்காட்சியைப் பார்வையிடலாம்.

இக்கண்காட்சி பாடசாலை மாணவர்களின் செயன முறைப் பாடத்திட்டத்திற்கு அமைவாகவும், விஞ்ஞான தொழில்நுட்ப ஆர்வலர்களின் ஆவலைப் பூர்த்தி செய்யும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளது. இதில் பௌதிகவியல், இரசாயனவியல், விலங்கியல், தாவரவியல், கணனி விஞ்ஞானம், கணித - புள்ளிவிவரவியல், மீன்பிடியியல் ஆகிய துறைகள் சார்ந்த கண்காட்சிப் பொருள்களும், செயன்முறைகளும் காண்பிக்கப்பட்டு விளக்கம் தரப்படவுள்ளது.

இக்கண்காட்சியைப் பார்வையிடுவதற்கு வெளி மாவட்டங்களான கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த பல பாடசாலைகள் தமது மாணவர்களை அழைத்துவரவிருப்பதாக முற்கூட்டியே பதிவுசெய்து தமது வருகையை உறுதிப்படுத்தியுள்ளன. வெளிமாவட்டங்களிலிருந்து இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் வருகைதரவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இவ்விஞ்ஞானக் கண்காட்சி விஞ்ஞான பீடத்தின் முப்பதாவது ஆண்டு நிறைவின் நிகழ்வாக நடைபெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

விஞ்ஞானக்கண்காட்சியில் இடம்பெறும் பிரிவுகள், அவை தொடர்பான விளக்கங்கள் தொடர்ந்து உதயனில் பிரசுரமாகும்.

ஊடக அனுசரணை: உதயன் அனுசரணை: SAMMSTECH

## இரங்கிடத் தயக்கம் ஏனோ?



*விண்ணவர் வியந்து போற்ற*
*விமலனார் அருகிருந்த வாறே*
*அண்டங்கள் அனைத்து மொன்றாய்*
*ஆண்டருள் புரியும் தாயே!*
*மண்மிசை வாழ் வோரெல்லாம்*
*மனமுவந்து உவகை பூக்க*

*என்னதான் தவறுனக்குத் தாயே*
*இழைத் தோமென இயம்பு வாயே!*
*கண்ணியம், ஒழுக்கம், நேர்மை*
*கடவுள் சிந்தனை மறந்தோமென்றோ*
*எண்ணத்தில் கோபம் பொங்க*
*இங்கெமை வருத்து கின்றாய்*
*இன்னமும் எங்கள் மீது*
*இரங்கிடவே தயக்கம் ஏனோ?*
*நண்ணிய அமைதிக் காற்றும்*
*நழுவியே போகுமானால்*
*வண்ணமார் ஈழத் தாயாள்*
*வருந்தியே இறந்தே போவாள்*


**- விகடகவி -**

# ஆசாரசீலராய் வாழ்வாங்கு வாழ்ந்திட வழிமுறைகள் சொல்லிடும் விஜயதசமி

விரதம் என்பது மனம் பொறிவழிப்போகாது நிற்றல் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்ற மூன்றினாலும் இறைவனை மெய்யன்போடு, விதிப்படி, விசேடமாக வழிபடுதல் விரதம் எனப்படும். இது சைவம வளர்த்த ஐந்தாம் குரவர் என அழைக்கப்படும் ஆறுமுகநாவலர் வாக்காகும். ஆலயங்களிலே மேற்கொள்ளப்படும் கிரியைகளைப் போன்று விரதமும் நித்தியவிரதம், நைமித்தியவிரதம் என வகைப்படுத்தப்படுகின்றது. தினம்தோறும் நாம் அனுஷ்டிக்கின்ற விரதங்கள் நித்திய விரதங்கள் என அழைக்கப்படும். உதாரணமாக திங்கள் விரதம், வெள்ளிவிரதம் முதலானவை.

நைமித்திய விரதம் எனப்படுவது விசேட விரதங்கள். விசேடதினங்களில் மேற்கொள்ளப்படும் விரதங்கள் நைமித்திய விரதங்கள் என சிவகாமங்கள் செப்புகின்றன. குறிப்பாக விநாயகவிரதம், சக்திவிரதம், முருகவிரதம் ஆகியன குறிப்பிடற்பாலன.

இங்கு சக்திவிரதங்களில் நவராத்திரிவிரதம், கேதாரகௌரிவிரதம், வரலட்சுமிவிரதம், ஆடிப்பூரம் முதலானவை விசேடமாக கொள்ளப்படுகின்றன தற்போது இந்துமக்கள் எல்லோராலும் சிறியோர் முதல் சான்றோர்வரை அனுஷ்டிக்கும் விரதமாக நவராத்திரிவிரதம் அமைகின்றது. எனவே நவராத்திரிவிரதம் பற்றி சுருக்கமாக நோக்குவதாக இப்பகுதி அமைகின்றது.




சக்தியை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடப்படும் சமயம் சாக்தம் என அழைக்கப்படும். இந்தியாவிலே வாழும் சாக்தர்கள் இச்சக்தி வழிபாட்டை பெரிதும் கடைப்பிடிக்கிறார்கள். அங்கு அறுவகைச் சமயங்களும் தனித்தனியாக அங்கு வாழ் மக்களால் பின்பற்றபடுகின்றன. ஈழத்திலே அவ்வாறு இல்லாவிடினும் அன்று தொட்டு இன்றுவரை தாயை தெய்வமாக கருதி வழிபடும் சக்தி வழிபாடு பயன் உடையதாக வழிசமைக்கின்றது

"சக்திபின்னமிலான் எங்கள் பிரான்" என்பது சைவசித்தாந்தக் கருத்து. எமது முழுமுதற் கடவுளாக சிவனை வழிபடுகின்றோம். அவனது சக்தியாக அன்னை ஆதிபராசக்தி உள்ளாள். இவளே அண்டசராசரங்களின் இயக்கமாகவும் ஊற்றுக்கெல்லாம் ஊற்றாகவும் விளங்குகின்றாள. ஐம்பூதங்களின் இயக்கியாக தொழிற்படுகிறாள். இவ்வாறு, இயற்கையை தாயாகக் கருதி வழிபடும் வழிபாடு சக்திவழிபாடு ஆயிற்று. சக்தி வழிபாட்டைக் கூறுகின்ற ஆகமங்கள் சாக்த தந்திரங்கள் என அழைக்கப்படுகின்றன. இவை அன்னையை "அகிலாண்ட கோடி பரமாத்த நாயகி" என அகிலத்தின் ஊற்றாக, இவ்வையகத்தின் ஊற்றாக சக்தியைக் குறிப்பிட்டு நிற்கின்றன.

சக்தியின் தன்மைகளை இரு கூறுகளாகப் பிரிக்கலாம். தெய்வத்தாய் என்று அவள்வழிபாடு செய்யப்படுகிறாள். இது ஒரு நிலை. இதில் உயிரினங்களைத் தாய்மைப் பரிவுடன் அவள் காப்பாற்றுவது மேலோங்கி நிற்கின்ற அம்சமாகும். இன்னொரு நிலையில் அவள் பயங்கரரூபத்துடன் சித்தரிக்கப்படுகிறாள். தீமைகளை அவள் அழிப்பதாக இந்த அம்சம் விளங்குகிறது. சக்தியை துர்க்கையாகவும், இலக்குமியாகவும், சரஸ்வதியாகவும், மனோன்மணியாகவும் பராசக்தியாகவும், முத்துமாரியாகவும் பல்வேறு நாமங்களைக் கொடுத்து நாம் வழிபாடு ஆற்றி வருகின்றோம். இவற்றுள் காளிவடிவமே மிகுந்த செல்வாக்குப் பெற்றதும் பயங்கர அகங்கார தோற்றமுடையதாகவும் விளங்குவதைக் காணலாம்.

சக்தி வழிபாட்டுக்கு பெயர்பெற்ற இடங்களாக வங்காளத்தையும் அஸ்ஸாமையும் கருதலாம. காளிகட்டம் என அழைக்கின்ற இடத்தில் கல்கத்தா காளிகோயில். இவற்றைவிட மதுரை மீனாட்சி காஞ்சி காமாட்சியாகவும், காசிவிசாலாட்சியாகவும் இந்தியாவிலே ஆங்காங்கு வழிபடப்படுவதை நாம் அவதானிக்க முடிகின்றது. அதேபோன்று ஈழத்திலே சக்தி வழிபாட்டுத்தலங்களாக மாத்தளை முத்துமாரியம்மன், தெல்லிப்பழை துர்க்காதேவி, நயினைாயம்பதி நாகபூசணி அம்மன்ஆலயம், வண்ணை வீரமாகாளியம்மன் ஆலயம், நெல்லண்டையம்மன் ஆலயம் போன்றன சிறப்புமிகு தலங்களாக அமைகின்றன.

இந்தியாவிலே புகழ்பெற்ற ஞானிகளும் தத்துவஞானிகளும் சாக்தர்களாக இருந்திருக்கிறார்கள். சங்கரர் சக்தியை போற்றி வழிபாடு ஆற்றியவர். சக்தி வழிபாடு தொடர்பாக பல நூல்களை ஆக்கியவாறு இவரையடுத்து சக்தி உபாசராக கருதப்படும் ராமகிருஷ்ணபரமகம்சர் போன்றோரும் குமரகுருபரர் அபிராமிப்பட்டர் என்போரும குறிப்பிடத்தக்கவர்கள். நவராத்திரி விழாக் காலத்திலே குமரகுருபரர் இயற்றிய சகலகலாவல்லிமாலை, அபிராமிப்பட்டர் இயற்றிய அபிராமி அந்தாதி போன்றன பக்தியோடு பாராயணம் செய்யப்படுகின்றன.

**தும்பளையூர் ம. பாங்கயன்**

இந்தியாவிலே ஒன்றுக்கும் ஒன்பதுக்கும் வயதுக்கும் இடைப்பட்ட கன்னிப்பெண்களை குமாரி, கல்யாணி, ரோகிணி, காளிகா, சண்டிகா பரமேஸ்வரி போன்ற தேவியின் நாமங்களை பாவித்து சொறுவிருத்தி வழிபாடு ஆற்றிவருகின்றனர். "செய்யும் தொழிலே தெய்வம்" எனும் வாக்குக்கு இணங்க நவராத்திரி இறுதிநாள் விஜயதசமிவிழா ஆலயங்கள் மட்டுமன்றி இல்லங்களிலும் பக்தி சிரத்தையோடு கைக்கொள்ளப்படுவதைக் காணமுடிகிறது.

எனவே, நவராத்திரிவிழா கொண்டாடும் இப்புனித காலத்திலே புனிதர்களாக, ஆசாரசீலர்களாக தேவியின் திருவருளைப் பெற்று வையகத்தில் வாழ்வாங்கு இந்துவாக வாழ்வோமாக. ❋

# வண்ணை காமாட்சி அம்மன் ஆலயம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில், காங்கேசன்துறை வீதி ஓரத்தில் அன்னை காமாட்சி அழகுத் திருக்கோயிலில் அமர்ந்திருந்து அடியவர்க்கு அருள் சுரக்கின்றாள். வண்ணை காமாட்சி ஸ்ரீ காஞ்சி காமாட்சி அம்பிகையின் மூர்த்தமாகவே இங்கு எழுந்தருளியுள்ளார். விஸ்வகுல மக்களின் குல தெய்வமான காமாட்சி கஷ்டங்களைப்போக்கி, துஷ்டர்களை அழித்து, இஷ்டசித்திகளைப் பெறுவதற்கு அருள் சுரப்பவள். தாயினும் சாலப் பரிந்துசேயினை அனைத்துப் பிறவி நோயினைப் போக்கும் தாயவளின் அருட்திறன அளவுகடந்தது.

## ஆலயச்சிறப்பு 2

இவ்வாலயம் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயம் என்றும், வண்ணார்பண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயம் என்றும் வண்ணார்பண்ணை நாச்சிமார் கோயில் என்றும் அழைக்கப்படுகின்றது. நாச்சிமார் கோயில் என்று முன்னர் அழைக்கப்பட்ட இவ்வாலயம் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயம் என தற்போது அழைக்கப்படுகின்றது. காமாட்சி அம்பிகையே மூலமூர்த்தியாக விளங்குகின்றாள். இவ்வாலயத்தின் தலவிருட்சம் மருத மரம்.

காமாட்சி அம்பிகை தனது நான்கு திருக்கரங்களிலும் கோமரம், துறோட்டி, கரும்புவில், புஸ்பபாணம் என்பனவற்றைத் தாங்கியிருக்கின்றாள்.

ஆனால், அபயவரத கரங்கள் என்று கூறப்படும் கரங்கள் உடையவள் அல்ல. ஆனால், அப்படிப்பட்ட கரங்களினால் செய்யும் தொழிலைச் செய்யாமலும் விடவில்லை. ஆகையினால், அழித்தல் தொழிலையும், காத்தல் தொழிலையும் எப்படிச் செய்கின்றாள்? அதாவது அவ்விரு தொழில்களையும் தனது பாதங்களினால் செய கின்றாள் என்று வேதங்கள் கூறுகின்றன.

மேலும், அம்பாளுடைய திருவடிகளே அன்பர்களது இஷ்ட காமியங்களை அவர்கள் நினைத்ததிலும் பார்க்க அதிகமாக வழங்குகின்றனவாம்.


இறைபரம் பொருளை தாயாகத் துதிப்பதில் மனத்திற்கு சாந்தியும் திருப்தியும் ஏற்படுகின்றது. தாயாகித் தாங்குகின்ற தயாபரன் என்றே இறைவன் அழைக்கப்படுகின்றான். அம்மையே அப்பா, ஒப்பிலா மணியே என்றே இறைவனை மணிவாசகர் விவரித்துள்ளார்.

**- திருமதி சி.பரமேஸ்வரி -**

மேலும், தாயேயாகி வளர்த்தனை போற்றி என்று கூறியிருப்பதும் நினைவில் கொள்ளத்தக்கது. ★

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 26 - 08 - 1919



மறைவு 04 - 10 - 2003

**திருமதி இராசம்மா ஆனந்தர்**

(பஞ்சவர்ணம்)

திதி: 22-10-2004

*மங்கையர் திலகமாய் மாண்புடன் வாழ்ந்தீர் அம்மா!*
*எங்களின் ஏற்றமிகு வாழ்வுக்காய் உம்மை அர்ப்பணித்தீர்!*
*இன்று ஓராண்டு மறைந்து போனாலும் – எமது*
*உள்ளங்களில் நின்று ஒளி வீசுகின்றீர் தாயே!*

இணுவில் கிழக்கு,
இணுவில்.
(37812) (26-16-19)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 41ஆவது நாள் கண்ணீர் அஞ்சலி

மண்ணுலகில் 31 - 01 - 1964



விண்ணுலகில் 12 - 09 - 2004

**இரத்தினசபாபதி இரத்தினானந்தன்**

நேற்றுவரை நின்று சிரித்தாய்
நீக்கமற எங்கும் நிறைந்தாய்
ஆற்றலோடு ஆடிய ஆனந்தா
அடங்கிப் போனாயோ விதிவந்தா!

கண்ணோடு உன் உருவம் நிழலாடுதே
நீ இல்லை என்று சொல்ல உள்ளம் நோகுதே!
மண்மூடிச் சாவதுன் விதியாச்சுதே
மன்னவனே எம் வாழ்வின் துணை போச்சுதே.
*அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.*

பிரிவால் வாடும்:
மனைவி: மஞ்சுளா,
பிள்ளைகளான: மயூரி, லக்சுஜா,
லவன்சியா, சுஜீபன், யதுர்சிகா
மற்றும் உற்றார், உறவினர்கள்.

கைத்தொழிற்பேட்டை,
அச்சுவேலி.
(37784) (26-16-19)


## எச்சரிக்கை

WATERTEC உற்பத்திப் பொருட்களைப் போன்று வேறு பொருட்கள் தனி நபர் அல்லது நபர்களினால் "SKYTEC" மற்றும் "WATERTEK" என்ற வியாபாரப் பெயர்களினால் மலிவாக, போலியாகத் தயாரிக்கப்பட்டு சட்ட விரோதமாக நன்மையடைந்து இலாபமீட்டும் நோக்குடன் பொது மக்கள் மத்தியில் விற்பனை செய்யப்படுகின்றன என்பதை நாம் கண்டுபிடித்துள்ளோம்.

இந்தப் பொருட்கள் மலேசியாவில் உற்பத்தி செய்யப்பட்டவையல்ல என்பதையும் அவற்றின் மேலுறையில் காணப்படும் முகவரி போலியானது என்பதையும் பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தருகிறோம்.

மலிவானதும் போலியானதுமான இந்தப் பொருட்களை உற்பத்தி செய்பவர் அல்லது இறக்குமதி செய்பவர் பற்றிய விபரங்களை அறியத் தருபவருக்கு மலேசியாவின் WATERTEC தகுந்த சன்மானம் வழங்கும். இவ்வகை போலியான பொருட்களின் விற்பனையில் ஈடுபடுபவர்கள் மலேசியா WATERTEC நிறுவனம் மேற்கொள்ளும் சட்ட நடவடிக்கைகளினால் ஆபத்தை எதிர்கொள்ள நேரிடும்.

இவற்றைத் தவிர்த்துக்கொள்வது எப்படி?
எப்பொழுதும் அவதானியுங்கள்

WATERTEC
Simply Better

நீங்கள் வாங்கும் சகல Watertec பொருட்களினதும் முத்திரை




524, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 2324281-5, 2387282-5 ஃபெக்ஸ்: 2446554


## மகாபொல புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.22

2003/2004 கல்வியாண்டில் யாழ்.பல்கலைக் கழகத்திற்கு அனுமதி பெற்ற மாணவர்களுக்கான மகாபொல புலமைப் பரிசில் வழங்கும் வைபவம் அடுத்தமாதம் 6ஆம் திகதி காலை 9மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெறவுள்ளது. (10-202)

## மதிப்பீட்டுப் பரீட்சை

தென்மராட்சி,ஒக்.22

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் விசேட விஞ்ஞான செயற்றிட்டத்தின் கீழான மூன்றாவது மதிப்பீட்டுப் பரீட்சை இன்று வெள்ளிக்கிழமை ஒரு மணிக்கு தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் நடைபெறவுள்ளது. (8-117-31)

## பரிசளிப்பு விழா

சங்கானை,ஒக்.22

சுழிபுரம், காட்டுப்புலம் அ.த.க.பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு அதிபர் நா.தனபாலசிங்கம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகச் சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் என். சண்முகசுந்தரமும் சிறப்பு விருந்தினராக அருட் சகோதரி பி.பேட்டனும் கலந்துகொள்ளவுள்ளனர். (10-29)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.22

யாழ் மாவட்டத்திலுள்ள ஐந்து கல்விப் பணிப்பாளர்களுக்கான முக்கிய கலந்துரையாடலொன்றை தமிழீழக் கல்விக்கழகம் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு யாழ். வலயக் கல்விப் பணிமனையில் நடத்தவுள்ளது.

இந்த முக்கிய கலந்துரையாடலில் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், மாவட்டக் கல்விப் பணிப்பாளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், கணக்காளர் ஆகியோரைத் தவறாது கலந்துகொள்ளுமாறு தமிழீழக் கல்விக் கழகத்தினர் கேட்டுள்ளனர். (10-13)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்.ஒக்.22

லண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் 'ஒப்பற்ற தலைவர் தந்தை செல்வா' எனும் நூல் வெளியீட்டுவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தந்தை செல்வாவுடன் அரசியலில் ஈடுபட்ட ஐ.தி.சம்பந்தன், பே.செ.குணரத்தினம் ஆகியோர் இந்த நூலை எழுதித் தொகுத்துள்ளனர். (10-202)

## கலாசார மண்டபத் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.22

திக்கம், மத்திய சனசமூக நிலையத்தால் அமைக்கப்பட்ட திக்கம் கலாசார மண்டபத் திறப்பு விழாவும், பரிசளிப்பு விழாவும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு நிலைய வளாகத்தில் நடைபெறவுள்ளன.

திக்கம், மத்திய சனசமூக நிலையத் தலைவர் க.சுதேஸ் தலைமையில் நடைபெறும் இந நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எம். கே. சிவாஜிலிங்கம், சுரேஷ் பிரேமச்சந்திரன், ஜி.ஜி.கஜேந்திரகுமார், செ. கஜேந்திரன், மாவை. சேனாதிராஜா, மா.க.ஈழவேந்தன், ந.ரவிராஜ், திருமதி பத்மினி சிதம்பரநாதன், கி.சிவனேசன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

இந்நிகழ்வில் மண்டபப் பெயர்ப்பலகையை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும் நினைவுச்சின்னத்தினை வே.கணேசமூர்த்தியும் திரைநீக்கம் செய்து வைப்பார்கள். தொடர்ந்து புதிய மண்டபத்தினை மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி திறந்துவைப்பார். (10-203)

## திருமூலர் குருபூசை

யாழ்ப்பாணம்,ஒக்.22

இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் நடத்தும் திருமூலநாயனார் குருபூசை விழா எதிர்வரும் 27ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இணுவில் மஞ்சத்தடி முருகன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்துசமய அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரையினை வழங்குவார்.

சிறப்புச் சொற்பொழிவினை யாழ்.பல்கலைக் கழகத்தின் இளைப்பாறிய பேராசிரியர் திருமுறைச் செல்வன் ச.விநாயகமூர்த்தி ஆற்றுவார்.

மட்டுவில் தெற்கு வேரற்கேணி கந்தசுவாமி கோயில் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் பண்ணிசை மற்றும் திருமந்திரம் என்பனவற்றை நிகழ்த்துவர்.

இணுவில் மத்திய கல்லூரி மாணவர்கள் கலை நிகழ்ச்சிகளையும், இணுவில் இந்துக் கல்லூரி மாணவர்கள் கதாப் பிரசங்கத்தையும் வழங்குவர். (10-6)

## நீங்காத நினைவுகளுடன் ஒருவருடம்

மண்ணில் 09 - 03 - 1916



விண்ணில் 03 - 11 - 2003

**அமரர் பகவதி திசவீரசிங்கம்**

திதி: 22.10.2004

உள்ளத் தாமரையில் என்றும் மலர்ந்திருந்தும்
உங்கள் நினைவுகளில் உயிர்வாழும் நாங்கள்
ஆண்டு ஒன்று கண்ணீருடன் கடந்தது அம்மா!
ஆறாத துன்பத்தில் தவிக்கின்றோம் நாம்!

*துன்னாலை கிழக்கு, கரவெட்டி.* - குடும்பத்தினர்.

(C/37436)(42-16-19-26)

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

*அன்னை மடியில்* 22 - 01 - 1939



*இறைபதம்* 10 - 10 - 1997

**அமரர் நடராசா ஜெகதீஸ்வரி B.Sc.**

*(ஓய்வுபெற்ற ஆசிரியை, வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்)*

திதி: 22.10.2004 (மகா நவமி)

கண்களில் கண்ணீர் சொரிந்து ஏழாண்டுகள்
எம் மனங்களில் குடிகொண்ட கோயிலாய்
நீங்கள் வாழ்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய எம்
குல தெய்வங்களை வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
கணவர்: தெய்வசித்தன இ.நடராசா
*(ஓய்வுபெற்ற பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்).*

*தேவாலய வீதி,*
*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.*
(37777)(42-16-19-26)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

*அன்னை மடியில்* 14 - 11 - 1935



*மண்ணின் மடியில்* 09 - 10 - 2003

அமரர்

**குருநாதி குலசிங்கம்**

எங்களை விட்டுப்பிரிந்து ஓர்
ஆண்டு ஓடி மறைந்தாலும்
அகலாது எங்கள் உள்ளங்களில் உங்கள் நினைவுகள்.

உங்கள் பிரிவால் துயருறும்:
தாய், மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*வட்டுக்கிழக்கு,*
*வட்டுக்கோட்டை.*
(37764)(42-16-19-26)

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 29 - 11 - 1937



மறைவு 02 - 11 - 1995

**திருமதி பரம்சோதி கமலாதேவி**

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

திதி: 22-10-2004

ஆண்டுகள் ஒன்பது பறந்தோடிப் போயினவே!
மீண்டும் ஒருமுறை உம் முகம் காட்டீரோ?
உமையிழந்த கவலையினால் தினமும் கலங்குகின்றோம்
இன்று உம்மை நினைத்து அஞ்சலி செய்கின்றோம்.

'சந்திரவாசா',
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.
(37812) (26-16-19)

செ.பரம்சோதி
*(கணவர்).*

பொது சன நூலகம்

# க.பொ.த.(சா/த) பரீட்சை - 2004

## மாதிரி வினாப்பத்திரம்

## கணிதம் - I

உதயன் ஜி.சீ.ஈ. (சா/த) மாதிரிப் பரீட்சைகள் இலக்கம் - 13

32 T I

நேரம்: ஒரு மணி

ஆசிரியர்: T.மயூரன்

01. $3.3d = 6.6$ எனின் dஇன் பெறுமானத்தைக் காண்க?

02. $(-2/5)^2$ என்பதன் பெறுமானத்தைக் காண்க?

03. 30 m தூரத்திற்கு ஒன்றாக மின் கம்பம் நடப்படுகின்றது எனின், 31 மின் கம்பங்களிற்கு இடையிலான தூரத்தைக் காண்க?

04. $P-P^3$இனைக் காரணிப்படுத்துக?

05. 233 mm, 0.2 m, 22 cm ஏறுவரிசைப்படுத்துக?

06. செய்தித்தாள் ஒன்றின் தடிப்பு 0.0689 cm ஆகும். இதை இரு பொருளுடைய இலக்கிற்கு மட்டம் தட்டுக?

07. 3p, 8p, 13p.... என்ற தொடரில் 21ஆம் உறுப்பைக் காண்க?

08. காணித் துண்டு ஒன்றின் மாதிரிப் படம் 1 cm இனால் 100 m காட்டப்படும் அளவிடைக்கு வரையப்பட்டுள்ளது. மாதிரிப் படத்தின் பரப்பளவு $25.25cm^2$ எனின் காணித் துண்டின் பரப்பளவைக் காண்க?

09. மூன்று எண்களைக் கொண்ட ஒரு தொடையின் இடை 20 ஆகும். அவற்றின் ஆகாரம் 18 எனின் அந்த எண் தொடையினை எழுதுக?


10. $111_{இரண்டு}$ என்னும் எண்ணிற்கு அடுத்த இரண்டை அடியாகக் கொண்ட எண்ணை எழுதுக?

**(1x10=10 புள்ளிகள்)**


11. "TAMILSTAR" என்னும் சொல்லில் உள்ள எழுத்துக்களின் தொடை X எனின்,
   (i) தொடை X ஐ மூலகங்களுடன் எழுதுக?
   (ii) தொடை X இன் தொடைப் பிரிவுகளின் எண்ணிக்கை யாது?

12. முக்கோணி ஒன்றின் மூன்று பக்கங்களின் நீளங்களும் 25cm, 20cm, 15cm ஆகும்.
   (i) இது எவ்வகை முக்கோணி ஆகும்?
   (ii) இம்முக்கோணியின் பரப்பளவு யாது?

13. 2x2x3x5, 2x3x3x5, 2x3x5x5 மூன்று எண்கள் அவற்றின் முதன்மைக் காரணிகளாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அவற்றின்
   (i) பொ.கா.பெ.
   (ii) பொ.ம.சி. ஆகியவற்றைக் காண்க?

14. 

உருவில் (i) $P\hat{M}N$ (ii) $L\hat{O}P$ ஆகியவற்றைக் காண்க?

15. 


(i) உரு ABCD இன் பரப்பு யாது?
(ii) h இன் பெறுமானம் யாது?

16. a=4, b= -3 எனின்
   (i) $a^2-ab$
   (ii) $\frac{a+b}{a-b}$ என்பவற்றைக் காண்க?

17. 15% பங்குலாபம் வழங்கும் கம்பனியின் ரூ.10 பங்குகளை ரூ.15 வீதம் வாங்குவதற்கு ரூ.30,000ஐ முதலீடு செய்யும் ஒருவர்,
   (i) வாங்கிய பங்குகளின் எண்ணிக்கை?
   (ii) அவருக்குக் கிடைக்கும் வருமானம் யாது?

18. $(20-x)^0$ இன் (i) நிரப்பிக் கோணம்
   (ii) மிகை நிரப்பிக் கோணம் என்பவற்றைக் காண்க?


19. 6 மனிதர்களின் நிறைகளின் இடை 40 kg ஆகும். இன்னுமோர் மனிதன் சேரும்போது நிறைகளின் இடை 1 kg ஆல் அதிகரிக்கின்றது.
   (i) 7 மனிதர்களின் மொத்த நிறை?
   (ii) 7 ஆவது மனிதனின் நிறை என்ன?

20. 

உருவில் LM //NO, $P\hat{Q}R=90^0$ ஆகவும் இருப்பின்
(i) நேயக் கோணங்கள் எவை?
(ii) $d=70^0$ எனின் Cஇன் பெறுமானம் யாது?


**(2x10=20 புள்ளிகள்)**

21. X = 0.7777.... என்னும் மீளும் தசமத்தைப் பின்னமாக மாற்றும் இடை வெளியை நிரப்புக?
   X=0.7777
   10X=..................
   10X-X=..................
   ∴ X=..................


22. 

முக்கோணி PQR இல் Sin (90-θ)= Cosθ என்பதனை வாய்ப்புப் பார்க்க.
   $Q\hat{P}R$=..................
   Cosθ= $\frac{......}{PR}$
   Sin(90-θ)= $\frac{......}{PR}$
   ∴ sin(90-θ)=Cosθ

23. (i) $4X^2 - 36 = 0$ இனைத் தீர்க்க?
   (ii) Xஇன் ஆகக் குறைந்த பெறுமான மூலகம் எது?
   (iii) ஆகக் குறைந்த பெறுமான மூலகத்திற்கும் ஆகக் கூடிய பெறுமான மூலகத்திற்கும் இடையிலான பெருக்கம் யாது?

24. 


தரப்பட்ட படத்தில் PQ//TS ஆகும். நான்கு கோணங்கள் $2x^0, 5x^0, 3x^0, 4x^0$
   (i) $P\hat{T}S$ இனை $X^0$இல் காண்க?
   (ii) X இல் இலகுவான சமன்பாடு ஒன்றைப் பெறுக?
   (iii) X இன் பெறுமானம் யாது?

25. 

உருவில் Sinθ =3/5 எனின்,
   (i) cosθ= $\frac{..........}{..........}$
   (ii) Tanθ= $\frac{..........}{..........}$
   (iii) Cosθ. tan θ என்பவற்றின் பெறுமானம் காண்க?


26. A=1+3+5+.......................49
   B=3+9+15+.......................147 எனில்,
   (i) A இன் 7ஆம் உறுப்பு யாது?
   (ii) B இன் 7ஆம் உறுப்பு யாது?
   (iii) B ஐ A சார்பாகத் தருக?

27. (i) 123x117 என்பதனை (a+b)(a-b) என்ற வடிவில் எழுதுக?
   (ii) காரணி பற்றிய உமது அறிவின் அடிப்படையில் 123x117+9 என்பதன் பெறுமானத்தைக் காண்க?
   (iii) $\sqrt{123x117+9}$ இன் பெறுமானம் யாது?

28. இருவட்டங்கள் P,Q என்பவற்றில் ஒன்றையொன்று வெட்டுகின்றன. TA, TB என்பன தொடரிகளாகும். ATB = $55^0$ எனின்,


   (i) (a+x) இன் பெறுமானம் யாது?
   (ii) $A\hat{Q}B$இன் பெறுமானம் யாது?
   (iii) இங்கு நீர் பயன்படுத்திய தேற்றம் யாது?

29. a Sinθ = bCos θ எனின்,
   (i) Tan θ இன் பெறுமதியை a,b என்பவற்றில் எழுதுக?
   (ii) a=b எனின் θஇன் பெறுமதி யாது?

30. 

   (i) AB இன் படித்திறன்?
   (ii) AB இன் சமன்பாடு?
   (iii) PQ இன் சமன்பாடு என்பவற்றைக் காண்க?

**(3x10=30 புள்ளிகள்)**

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

இரும்பகத்திற்குத் தேவையான அலுமாரி, மேசை, ராக்கைகிள் மற்றும் சகல தளபாடங் களும் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு ஜஸ்ரின், 0777 667606, 021 222 2452.(37818)

நலல நிலையிலுள்ள 58 - ஜய் தொடர்லக்க மாகக்கொண்ட ரவுனேஸ்ரக ஹயஸ் வான் விற் பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: ஜஸ்ரின், 0777 667606, 021 222 2452. (37818)

ஆஸ்திரேலியன் ஆண், பெண் நாய்க்குட்டி கள், 45 நாள் நிரம்பிய ஜேர்மன் நாய்க்குட்டி கள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு:S.செந் தில்செல்வன், சிவகுல வீதி, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய். (37810)

10-20 போட்டோக்கொப்பி மெசின், டீசல் எஞ்சின் (3கிலோவாற்ஸ்) என்பன விற்பனைக் குண்டு. தொடர்பு:சொ.விமலன், 593, பருத்தித் துறை வீதி (யாழ்.மா.சபை அருகில்), நல்லூர், யாழ்ப்பாணம்.T.P.:021-222 2181. (37843)

## தவறிவிட்டது

இல.122/4,கோயில் வீதி,கொக்குவில் கிழக்கு, கொக்குவிலைச் சேர்ந்த சிறினிவாசன் சோமசிறிஜெயன் அவர்களுடைய தேசிய அ. அ.(இல.861103447V), வி.அ.அ.(இல.0902023905) மற்றும் பாடசாலை அ.அ.என்பன நல்லூர்க் கோயிலுக்கும் கொக்குவிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.தகுந்த சன்மானம் வழங்கப்படும். (37838)

## இலவச விநியோகம்

இல.65, கச்சேரி நல்லூர் வீதியில் அமைந் துள்ள காணியில் மக்கிமண் உள்ளது. இம் மக்கிமண்ணை இலவசமாக ஏற்றிச்செல்ல லாம். தொடர்பு:831, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப் பாணம். (37846)

## வீடு விற்பனைக்கு

நெல்லியடி செட்டிதறை ஒழுங்கையில் 4¾ பரப்புகாணியும் வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய T.P.No:222 6286.(37814)

சுண்டுக்குளி கச்சேரிக்கு அருகில் 3¼ பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்ப னைக்கு உண்டு.தொடர்புகளுக்கு:0777 145282. (37807)

## கோழிக்குஞ்சு விநியோகம்

பகிரா புறொயிலர் குஞ்சுகள் 23.10.2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற் கொள்ளவும். ராஜீவ், கால்நடைத் தீவன விற் பனைநிலையம், சண்டிலிப்பாய்ச் சந்தி. ஸ்ரீராம், பருத்தித்துறை பஸ்நிலையம் முன்பாக, P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. றஞ்சித், 517, ஸ்ரான்லி றோட், T.P.:222 2867,222 3529. (37801)

## மணமகள் தேவை

1979 ஆம் ஆண்டு, 91 பாவத்தோடு, செவ் வாய்க்குற்றமுள்ள றாஸ்மன் முடித்து சிவில் என ஜினியர் செய்துகொண்டு சொந்தமாகக் கடை வைத்திருக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்பு:கமலக்கண்ணன் திருமணசேவை, 361, கோயில் வீதி, நல்லூர். (37836)

## திருமண சேவை

டாக்டர்கள், என்ஜினியர்கள், பட்டதாரிகள், லிகிதர்கள், ஆசிரியர்கள், வர்த்தகர்கள், தனியாா நிறுவனத்தில் பணிபுரியும் மற்றும் கனடா, லண டன் பட்டதாரிகளும் எம்மிடம் உள்ளனர். தொடர்பு: கமலக்கண்ணன் திருமணசேவை, 361, கோயில் வீதி, நல்லூர். (37835)

## வீடு வாடகைக்கு

Colombo தெகிளை Hill Street இல் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உணடு. தொடர்பு: 077 3039454. (37803)

"சிவனடி", இல.141,ஆடியபாதம் வீதி, திரு நெல்வேலியில் சகல வசதியுடன் கூடிய மாடி வீடு வாடகைக்குண்டு (நிறுவனங்களுக்கு உகந தது) மேற்கண்ட விலாசத்தில் பி.ப. 2மணியிலி ருந்து மாலை 6மணிவரை தொடர்புகொள்ளவும். (37847)

## இணையத்தளம்

பாடசாலைகள், சங்கங்கள், நிறுவனங்கள், விற்பனை மையங்களுக்கான இணையத்தளம்
Domain Registration, Hosting, Designing, Maintenance and e-mails
ஒரு வருடத்திற்கான மொத்தக் கட்டணம் ரூபா 8000/= மட்டும்.
**SAAMSTECH**
841, Hospital Road, Jaffna.
Phone: 0773 068968.
(சி-37842)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08 – 04 – 1981 | 07 – 09 – 2004 |

**சிவலிங்கம் விஜிதரன் (தரன்)**

நாள்கள் தான் கடந்தாலும்
ஆறவில்லை எம் துயர்!
நீண்டதோர் பாசம் ஊட்டி
எம்முடன் உறைந்த தரனே!
எப்போது தான் காண்போம்
உன் இனிய முகத்தை.

உன் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கலாசாலை வீதி, திருநெல்வேலி. (37837)(34-16-45)

என்றும் உன் நினைவுடன் வாழும்: சிவலிங்கம் குடும்பத்தினர்.

## நீங்காத நினைவுகளில்

| முதலாம் ஆண்டு | ஆறாம் ஆண்டு |
|---|---|
|  |  |
| அமரர் **இராமு சின்னத்துரை** | திருமதி **சின்னத்துரை பார்வதி** |
| தோற்றம்:16.12.1918 மறைவு: 04.10.2003 | தோற்றம்:19.03.1929 மறைவு: 29.09.1998 |

திதி: 22.10.2004

அன்புக்கோர் அணிகலனாய் அவனிதனில் வாழ்ந்தீர்கள்! இன்று உம் நினைவால் நெஞ்சம் உருகுகின்றோம்.

இலகடி, கோப்பாய் வடக்கு, கோப்பாய். (37839)(34-16-45)

தகவல்: மகன்: சி.இலங்கைநாதன்.

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

கைதடி,ஒக்.22

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவின் பிரதேச ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை காலை 10மணிக்கு உதவி அரச அதிபர் க.ஸ்ரீ மோகனன் தலைமை யில் மாநாட்டு மண்ட பத்தில் இடம்பெறும்.

இக்கூட்டத்தில் அத்தியாவசிய விட யங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட வுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது. (8-75)

## வீதி அகலமாக்கல்

கைதடி-கோப் பாய் வீதியின் இரு மருங்கும் கடந்த சில தினங்களாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஊழியர் களால் துப்புரவுசெய் யப்படுகின்றது.

இவவீதி விரைவில் திருத்தப்படவுள்ள தோடு, நீண்டகாலப் பாவனைக்கு ஏற்ற வாறு இருமருங்கும் அகலமாக்கப்பட இருப்பதாகவும் தெரி விக்கப்படுகின்றது. (8-75)

## அறநெறிப் பாடசாலை திறப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.22

யாழ்ப்பாணம் பெரியகடை கிராம அலுவலர் பிரிவில் உள்ள மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தினால் அறநெறிப் பாடசாலை நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு மணிக் கூட்டு வீதியில் உளள ரசிக ரஞ்சனா சபா மண்டபத்தில் ஆரம் பித்து வைக்கப்பட வுள்ளது. (8-86)

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து




1ஆவது 22 - 10 - 2004

பாஷையூரைச் சேர்ந்த யூட் பவா தம்பதிகளின் செல்வப் புதல்வி மதுஷனா தனது முதலாவது பிறந்த தினத்தை இன்றுவெள்ளிக்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, ஆசை அக்கா றுக்ஷனா, அம்மையா, அப்பம்மா, நிரு அத்தை, பெரியமாமா, அத்தை, அத்தான்மார்; பிரான்ஸில் வசிக்கும் மாமா, அத்தை, அத்தான்மார், பருத்தித்துறையில் வசிக்கும் மாமா, மாமி, ஆசை மச்சாள் சின்சியா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் புனித அந்தோனியார் அருள்பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

C/37825

தகவல்:பாக்கியநாதர் யூட்.

## மூன்றாவது பிறந்தநாள் வாழ்த்து

22.10.2004






முரளிதாஸ் – சுபாசினி தம்பதிகளின் செல்வப்புதல்வி **செல்வி யனுசியா**

இன்று (22.10.2004) வெள்ளிக்கிழமை தனது மூன்றாவது பிறந்தநாளை வெகு விமரிசையாகத் தனது இல்லத்தில் கொண்டாடுகிறார்.

யனுக்குட்டியை உறவினர்கள் அனைவரும் சகல ஐஸ்வரியங்களுடன் பல்கலைகளும் கற்றுச் சீரோடும் சிறப்போடும் பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென உளமார வாழ்த்துகின்றார்கள்

போட்டோ சிறி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

**மீரா அப்பம்மா, கிருஷான், வக்ஷலன், சித்தப்பாமார்.**

(37819)(42-34-16-45)

## மக்கள் வங்கி அறிவித்தல்

PEOPLES BANK

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 30-06-2003 இற்கு முன் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் **யாழ்.ஸ்ரான்லி வீதி, மக்கள் வங்கிக் கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.**

| கிளை | ஏலம் விடப்படும் திகதி |
|---|---|
| சுன்னாகம் - 109<br>பருத்தித்துறை - 285 | 23-10-2004 |
| யாழ்.<br>பல்கலைக்கழகக் கிளை-162<br>யாழ்.கன்னாதிட்டிக் கிளை - 284 | 25-10-2004 |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப்போடும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
யாழ்ப்பாணம்/வன்னி.

(சி-38459) (26-16-45-34)

# வேம்படி மாணவி கிறீஸ் நாட்டுக்குச் செல்லவுள்ளார்



வேம்படி மகளிர் கல்லூரி மாணவி சிவகுருநாதன் வித்தியாரணி சர்வதேச சதுரங்கப் போட்டியில் கலந்துகொள்வதற்காக கிறீஸ் நாட்டுக்குச் செல்லவுள்ளார்.

இலங்கை சதுரங்க சம்மேளனம் அகில இலங்கை ரீதியில் மாணவர்களுக்கிடையே நடத்திய போட்டியில் 2ஆம் இடத்தைப்பெற்ற இவர், இலங்கையின் சார்பில் சர்வதேசப் போட்டியில் கலந்துகொள்ளவுள்ளார்.

காங்கேசன்துறை, தையிட்டியைச் சேர்ந்த சிவகுருநாதன் தம்பதிகளின் புதல்வியான இவர், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் (கணிதப்பிரிவு - 2006) மாணவியாவார். (10-11)

## சிநேகபூர்வ உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரிக்கும் இடையேயான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி இன்று பிற்பகல் ஒரு மணிக்கு சென்.ஹென்றிஸ் மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

14,16,18,20 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே இடம்பெறவுள்ள இப்போட்டிகள் கடந்த பல வருடங்களாக இடம்பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (10-86)

## கூடைப்பந்தாட்டம்

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்தும் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட ஆண் அணிகளுக்கு இடையேயான ஆட்டத்தில் இன்று மாலை 5 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கூடைப்பந்தாட்ட மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் உடுவில் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழகக் கூடைப்பந்தாட்ட அணி மோதவுள்ளது. (10-86)

## புதிய நிர்வாகம்

கோப்பாய் வடக்கு கண்ணகி அம்மன் சனசமூக நிலைய ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

தலைவராக இஜனகேந்திரனும், செயலாளராக வே.கமலதேவனும், பொருளாளராக அ.லோகேஸ்வரனும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

# தீவகவலய உதைபந்தாட்டப் போட்டியின் சம்பியன்கள்

வலி.வடக்கு,ஒக்.22

தீவக வலயப் பாடசாலைகளுக்கிடையே வலய மட்டத்தில் இடம்பெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் முறையே 14, 16, 18 வயதுப் பிரிவினருக்கிடையேயான ஆட்டத்தில் புங்குடுதீவு மகாவித்தியாலயம், நயினாதீவு ஸ்ரீ கணேசா வித்தியாலயம் மற்றும் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி வித்தியாலயம் என்பன இவ்வருட சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

14 வயதுப் பிரிவுக்கான ஆட்டத்தில் ஊர்காவற்றுறை சென்.அன்ரனஸ் கல்லூரியும் புங்குடுதீவு மகாவித்தியாலயமும் மோதிக்கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோல்களைப் பெற்றுக்கொண்டன. இரண்டாம் பாதி ஆட்டம் இரு அணிகளும் கடும் எதிர்பார்ப்புடன் மோதின. ஆனால், புங்குடுதீவு மகாவித்தியாலயம் மீண்டும் ஒரு கோலைப் பெற்று ஆட்ட முடிவில் 2:1 என்ற கோல்கணக்கில் சென்.அன்ரனிஸ் கல்லூரியை வெற்றிகொண்டு வலயமட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

3ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மகாவித்தியாலயமும் காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தியாலயமும் விளையாடின. சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மகாவித்தியாலயம் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது.

16 வயதுப் பிரிவினருக்கான இறுதி ஆட்டத்தில் புங்குடுதீவு மகாவித்தியாலயமும், நயினாதீவு ஸ்ரீகணேசா கனிஷ்ட வித்தியாலயமும் மோதின. ஆட்டம் முடிவடையும் நேரம் வரை இரு அணிகளும் கோல்கள் பெறும் பல்வேறு முயற்சிகளையும் மேற்கொண்டபோதிலும், கோல்களைப் பெறாத நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி, தோல்வியைத் தீமானிப்பதற்கு வழங்கப்பட்ட 'சமநிலை உடைப்பு' உதையின் மூலம் நயினாதீவு ஸ்ரீ கணேசா கனிஷ்ட வித்தியாலயம் 4:2 என்ற கோல்கணக்கில் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தை வெற்றிகொண்டு வலய மட்ட சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

3ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் ஊர்காவற்றுறை சென். அன்ரனஸ் கல்லூரியும் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயமும் விளையாடின. சென்.அன்ரனிஸ் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

18 வயதுப் பிரிவுகளுக்கான இறுதி ஆட்டத்தில் நயினாதீவு ஸ்ரீ கணேசா கனிஷ்ட வித்தியாலயமும், வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகாவித்தியாலயமும் மோதின.

ஆட்டம் தொடங்கிய நேரம் முதல் இரு அணிகளும் மிகவும் விறுவிறுப்பாக விளையாடின. முதல்பாதி ஆட்டத்தில் சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மகாவித்தியாலயம் ஒரு கோலைப் பெற்று முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்களைப் பெற முயன்ற போதிலும், கோல்கள் எதனையும் பெற்றுக்கொள்ளாத நிலையில் 1:0 என்ற கோல் கணக்கில் சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மகா வித்தியாலயம் நயினாதீவு ஸ்ரீ கணேசா கனிஷ்ட வித்தியாலயத்தை வெற்றிகொண்டு வலய மட்ட சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

3ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் ஊர்காவற்துறை சென்.அன்ரனீஸ் கல்லூரியும் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயமும் விளையாடி அன்ரனீஸ் கல்லூரி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(10-5-86)

**விளையாட்டு**

# ஓய்வு சச்சினைப் பாதிக்காது சௌரவ் கங்குலி நம்பிக்கை

கொல்கத்தா,ஒக்.22

மூன்று மாத ஓய்வு சச்சின் ஆட்டத்தைப் பாதிக்காது என்று இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் கங்குலி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்தியா-ஆஸ்திரேலியா இடையேயான மூன்றாவது டெஸ்ட் எதிர்வரும் 26ஆம் திகதி நாக்பூரில் ஆரம்பமாக உள்ளது. இதற்கான இந்திய அணி சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. காயம் காரணமாக முதல் இரண்டு போட்டிகளில் விளையாடாத சச்சின் இம்முறை அணியில் இடம்பெற்றுள்ளார்.

சச்சின் குறித்து கங்குலி செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

சச்சினைச் சந்தித்து இரண்டு, மூன்று நாள்கள் ஆகிறது. இதனால் தற்போது அவரது உடல் நிலை குறித்து எந்தத் தகவலும் எனக்குத் தெரியாது. மூன்று மாதமாக அவர் காயத்தால் அவதிப்பட்டு வருகிறார். இந்த நீண்ட இடைவெளி எந்த விதத்திலும் அவரது சிறப்பான ஆட்டத்தைப் பாதிக்காது என்று கூறினார்.

தற்போது கொல்கத்தாவில் துர்க்கா பூசையைக் கொண்டாடிவரும் கங்குலி, நாளை நாக்பூர் செல்கிறார். (10)

## விளையாடுவாரா சச்சின்? டாக்டர்கள் கையில் முடிவு

மும்பை,ஒக்.22

டாக்டர்கள் முடிவைப் பொறுத்தே சச்சின் டெண்டுல்கர் நாக்பூர் டெஸ்டில் விளையாட முடியும். இந்தத் தகவலை இந்தியக் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இடது முழங்கை காயம் காரணமாக சச்சின் டெண்டுல்கர் கடந்த சில மாதங்களாகக் கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்கவில்லை. அவர் இல்லாமல் துடுப்பாட்ட வரிசை தடுமாறுகிறது. குறிப்பாக, ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் இரு டெஸ்ட் போட்டிகளிலும் அவரது அருமையை இந்திய அணி உணர்ந்தது. மூன்றாவது டெஸ்ட் நாக்பூரில் 26ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்தப் போட்டியில் சச்சின் பங்கேற்பார் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. (10)

# சீன நிலக்கரிச் சுரங்கத்தில் வெடிவிபத்து: 56 பேர் பலி; 148 பேரைக் காணவில்லை!

பெய்ஜிங்,ஒக்.22

சீனாவின் மத்திய பிரதேசத்தில் அமைந்துள்ள நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட வாயு வெடிவிபத்தில் குறைந்தது 56 பேர் வரை உயிரிழந்துள்ளனர். 148 பேரைக் காணவில்லை என்று மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்குப் பொறுப்பான அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஹெனான் மாகாணத்தின் எக்ஸின்மி நகருக்கு அருகில் உள்ள நிலக்கரிச் சுரங்கமே இவ்வாறு வெடித்தது. அங்கு பணியாற்றிக் கொண்டிருந்த மொத்தம் 400 நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களில் அரைவாசிப்பேர் தப்பிவிட்டனர். காணாமற்போனவர்களில் சிறிதளவினரே உயிரோடு இருக்கக்கூடிய சந்தர்ப்பம் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் நேற்று அதிகாலை வேளையிலேயே இடம்பெற்றுள்ளது.

இச்செய்தி எழுதும்போது 56 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்றும் ஏனையவர்களுடைய நிலை குறித்துத் தேடப்படுவதாகவும் அவர்களில் சிலர் ஒருவேளை உயிரோடு இருப்பர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இத்தகவலை நிலக்கரிச் சுரங்கத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான நிர்வாகத்தின் பிரதிப் பணிப்பாளர் சன் ஹயுஷான் தெரிவித்தார்.

மேலும் ஹயுஷான் கருத்துத் தெரிவிக்கையில் -

அங்கு நடைபெற்ற இந்த வெடிவிபத்துச் சம்பவத்தில் 148 பேரும் காணாமற்போய் விட்டனர். இவர்கள் எல்லோரும் இறந்துள்ளனர் என்பதற்கான வாய்ப்புக்களே அதிகம். ஆனால், அதில் சின்ன மாற்றங்கள் ஏற்படலாம். இந்த வருடத்தில் மட்டும் சீனாவில் உள்ள அநேக நிலக்கரிச் சுரங்கங்களில் இவ்வாறு அதிக விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. இதற்கு என்ன காரணம் என்று என்னால் கூறமுடியவில்லை - என்றார்.

மிகப்பெரிய அளவில் நிலக்கரிகளை உற்பத்திசெய்து பயன்படுத்தும் நாடுகளில் சீனாவும் ஒன்றாகும். ஆனால், அங்கு மேற்சொன்னவாறான விபத்துக்கள் அடிக்கடி இடம்பெற்றுவருவது, நிலக்கரிச் சுரங்கத்தொழில் போதியளவு பாதுகாப்பு நடவடிக்கைகள் செய்யப்படவில்லை என்பதையே எடுத்துக்காட்டுவதாய் அமைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தின் கடந்த 9 மாதங்களில் சீனாவில் இடம்பெற்ற 2 ஆயிரத்து 796 சுரங்க விபத்துக்களில் 4ஆயிரத்து 153 பேர் உயிரிழந்துள்ளனர். இத்தகவலை வேலைக்கான பாதுகாப்பு நிர்வாகம் அறிவித்தது.

அத்தோடு, சீனாவின் பொருளாதாரத்தில் இவ்வாறான நிலக்கரி போன்ற சக்தி உற்பத்தியே பெரும் பங்குவகிக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

காணாமற்போனவர்களைத் தேடும் நடவடிக்கைகளில் மீட்புப் பணியாளர்கள் மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். 20 பேர் இதுவரை மீட்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை -

சீனாவின் தென்மேற்குப் பகுதியில் நடந்த மற்றொரு எரிவாயு கசிவு விபத்தில் 6 சுரங்கப் பணியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.(க-10)

## ஜப்பானில் சூறாவளி; 48 பேர் உயிரிழப்பு!

டோக்கியோ,ஒக்.22

ஜப்பானின் நிலப்பகுதியை மிக மோசமான சூறாவளி நேற்றுத் தாக்கியுள்ளது. இதனால், வெள்ளப்பெருக்கும், மண்சரிவும் ஏற்பட்டுள்ளன. இந்த இயற்கை அனர்த்தங்களில் 48பேர் கொல்லப்பட்டுள்ளனர்; 200பேர் காயமடைந்துள்ளனர்; 33பேர் காணாமற்போயுள்ளனர்.

இந்த ஆண்டில் 10ஆவது முறையாகத் தாக்கும் சூறாவளி இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சூறாவளியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மீட்புப் பணியாளர்கள் காணாமற்போனோரைத் தேடிவருகின்றனர்.

சூறாவளியினால் ஏற்பட்ட மண் சரிவினாலேயே அநேகமானவர்கள் உயிரிழந்துள்ளனர். ஏராளமான வீடுகள் சேதமடைந்துள்ளன. சூறாவளி பின்னர் கடல்பக்கம் திரும்பிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சூறாவளியின் தாக்கத்தால் மரங்கள் பிடுங்கி எறியப்பட்டன. அந்த மரங்கள், நிறுத்தப்பட்டிருந்த கார் உட்பட பல வாகனங்கள் மீது விழுந்து சேதத்தை ஏற்படுத்தின.

50 ஆயிரம் வீடுகளுக்கான மின்சாரம் தடைப்பட்டுள்ளது. ஒரு லட்சத்துப் பத்தாயிரம் பேர் இடம்பெயரக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

# வீரப்பனின் டயரி உட்பட ஆவணங்கள் அம்புலன்ஸ் வானிலிருந்து சிக்கின!

## தோண்டியெடுக்கக்கூடிய நிலையில் சடலம் அடக்கம்

தர்மபுரி,ஒக்.22

சந்தனமரக் கடத்தல் வீரப்பனும், அவரது சகாக்களும் சுட்டுக்கொலை செய்யப்பட்ட அம்புலன்ஸ் வானிலிருந்து வீரப்பன் தனது கைபட எழுதிய 'டயரி' ஒன்றும், ஏராளமான ஆவணங்களும் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்று நேற்றைய தகவல்களில் இருந்து தெரியவந்துள்ளன.

அந்த அம்புலன்ஸ் வானில் பணமும், நவீனரகத் துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டதாக முன்னர் வந்த செய்திகள் தெரிவித்தன. ஆனால், பின்னர் அதில் வீரப்பன் எழுதிய டயரி உட்பட பிரபல வழக்கறிஞர் ஒருவரின் 'விஸிட்டிங் காட்', பத்திரிகையொன்றின் ஆசிரியரின் 'விஸிட்டிங் காட்' என்பனவும் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வீரப்பனுக்கு அவருடைய சகாக்கள் மூலம் பிறர் கொடுத்தனுப்பிய கடிதங்களும், மாந்திரீகத் தாயத்துக்களும், மாந்திரீகப் புத்தகங்களும் அந்த அம்புலன்ஸ் வானில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், வீரப்பனின் ரகசிய டயரியில் பல திடுக்கிடும் தகவல்கள் உள்ளன என்றும் தெரியவந்துள்ளது. வீரப்பனுக்கு யார் யாருடன் தொடர்பு உண்டு என்ற விவரங்களும் யாருகெல்லாம் பணம் கொடுக்கப்பட்டது என்ற தரவுகளும் அந்த டயரியில் உள்ளனவாம்.

வீரப்பனுக்கு ஜோதிடத்தில் நம்பிக்கை உண்டு என்றும் பல கடிதங்களில் அவருடைய ஜாதகங்கள் குறிக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்பட்டது. வீரப்பன் தனது மனைவி, இரண்டு குழந்தைகளுடைய புகைப்படங்களையும் வானில் வரும்போது கொண்டுவந்தார் எனவும் சொல்லப்படுகிறது.

கைப்பற்றப்பட்ட டயரி, கடிதங்கள் என்பவற்றைக்கொண்டு விசாரணை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. வீரப்பனிடம் பணம் வாங்கியவர்கள், கொடுத்தவர்கள் மற்றும் கடிதம் எழுதியவர்கள் ஆகியோரிடம் முதற்கட்டமாக விசாரணைகள் நடத்தப்படலாம் எனத் தெரிகிறது.

இதேவேளை -

வீரப்பனின் சடலம் தேவையேற்படும்போது தோண்டியெடுக்கப்படும் நிலையிலேயே அடக்கம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-10)

# தன்மீதுள்ள வழக்குகளை வாபஸ்பெற கோருகிறார் வீரப்பன் மனைவி முத்துலட்சுமி

மேட்டூர்,ஒக்.22

என்மீதுள்ள வழக்குகளை வாபஸ்பெற்று, உரிய நிவாரணம் வழங்கவேண்டும் என வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி கோரிக்கை விடுத்துள்ளார். அத்தோடு, தனது கணவர் சாவில் சந்தேகம் உள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

மேட்டூரில் செய்தியாளர்களிடம் அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

அதிரடிப்படையினர் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக என்னைத் தொடர்ந்து கண்காணித்து வந்தனர். சில ஆண்டுகளுக்கு முன்னா கோவையில் என்னை ஓர் இடத்தில் அதிரடிப்படையினர் குடிவைத்தனர். அப்போது அதிரடிப் படையால் அனுப்பப்பட்ட பெண் எனக்கு உதவி செய்வதுபோல் நடித்தார். வீரப்பனைச் சரணடையச் செய்வதே நல்லது என்று கூறி ஒரு மலைப்பகுதிக்கு என்னை அழைத்துச் சென்றார். அவரும் அவருடன் வந்த மற்றொருவரும் காட்டுக்குள் தகவல் அனுப்பப்பட்டுள்ளதாகக் கூறினர். ஆனால், வீரப்பனிடமிருந்து எவ்விதப் பதிலும் கிடைக்கவில்லை.

இதற்கிடையில், அந்தப் பெண் அதிரடிப் படையினர் அனுப்பிய ஆள் என்றும் நல்லவர் போல் நடிக்கிறார் என்றும் தெரியவந்தது. இதையடுத்து நான் தப்பி வந்துவிட்டேன். சேத்துக்குளி கோவிந்தனைத் தவிர, வீரப்பன் வேறு யாரையும் நம்பமாட்டார். கனகராஜ் என்பவர் வீரப்பனுடன் நீண்டநாள்களாக இருந்தார். பின்னர் அவரிடமிருந்து வந்துவிட்டார். கனகராஜின் மூலம் பொலீஸார் வீரப்பனிடம் ஆள்களைச் சேர்ந்துவிட்டிருக்கவேண்டும். அவ்வாறு புதிதாக வந்தநபர்கள் காட்டிக் கொடுத்ததால்தான் வீரப்பன் குறித்த தகவல் பொலீஸாருக்குத் தெரியவந்திருக்கக்கூடும்.

வீரப்பனுக்கும் அரசியல்வாதிகளுக்கும எப்போதும் தொடர்பு இருந்தது கிடையாது. கல்வி அறிவு இல்லாததாலும் அறியாமையாலும்தான் அவர் யானைத் தந்தங்களைக் கடத்தினார்.

பொலீஸாரிடம் சிக்கிச் சாகும் அளவுக்கு அவர் கோழை அல்ல.

எனது கணவர் சாவில் சந்தேகம் உள்ளது. எனமீதுள்ள வழக்குகளை வாபஸ்பெற்று என்னை நிம்மதியாக வாழவிடவேண்டும் - என்றார்.

# கண் சிகிச்சைக்காக.....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

சென்றிருக்கிறார்கள். ஆனால், வழியில் வீரப்பன் கோஷ்டி தப்பிச் செல்ல முயன்றதாலேயே வேறு வழியின்றி அவர்களைச் சுட்டுக்கொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் வந்தது" என்கின்றனர் சிலர்.

அம்புலன்ஸில் வீரப்பனைக் கூட்டிச் செல்வது தெரிந்து, அவனது சகாக்கள் சிலர் வழிமறித்துத் தாக்க..... அதைத் தொடர்ந்து நடந்த ஒரு துப்பாக்கி யுத்தத்திலும் இந்த மரணங்கள் நிகழ்ந்திருக்கலாம் எனறு சொல்பவர்களும் இருக்கிறார்கள். ஆனால், அதிரடிப்படை வட்டாரங்களில் இதைக்கடுமையாக மறுக்கின்றார்கள். "உயிரைப்பணயம் வைத்து நாங்கள் நடத்திய இந்த ஒபபரேஷனை திட்டமிட்டுச் சிலா கொச்சைப்படுத்துகின்றார்கள்" என்கிறார்கள் இவர்கள். பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோது "எல்லா விஷயங்கலளயும் நான் உடனடியாக உங்களோடு பகிர்ந்துகொள்ள முடியாது. எல்லா விஷயங்களும் அரசின் பார்வைக்குப் போன பிறகு, தேவைப்பட்டால் நான் உங்களிடம் பேசுகின்றேன்" என்று கூறியிருக்கிறார் விஜயகுமார். ஒருவேளை, அவர் முழுமையாக வாய்திறக்கும்போது சந்தேகங்கள் பறந்து போகலாம்!

தமிழக - கர்நாடக காவல்துறை உயர் அதிகாரிகள் பலரும் சம்பவம் நடந்த இரவோடு இரவாக வந்து வீரப்பன் சடலத்தைப்பார்த்து விட்டு சந்தோஷத்தோடு புறப்பட்டுச் சென்றனர்.

பின்னிரவில் மருத்துவமனைக்கு வந்த சேலம் உதவிப் பொலீஸ்மா அதிபரான தமிழ்ச்செல்வன் "உடலை எந்த இடத்தில் வைக்கவேண்டும், எங்கெங்கே பொலீஸ் பாதுகாப்புப் போடவேண்டும் என்பது குறித்து விழிப்பாக இருங்க..." என்று எஸ்.பிக்களுக்கு உத்தரவு போட்டார். வீரப்பன் சடலத்தை உறவினர்களிடமோ அவரது அனுதாபிகளிடமோ ஒப்படைப்பதா அல்லது பொலீஸே இறுதிச் சடங்கு செய்வதா என்பது குறித்துப் பரபரப்பான விவாதங்களும் ஆஸ்பத்திரி வளாகத்திலே அரங்கேறிக் கொண்டிருந்தன.

காலை சுமார் ஒன்பது மணிக்கு ஒரு பொலீஸ் ஜீப்பில் பாதுகாப்பாக அழைத்துவரப்பட்டார், வீரப்பனின் மனைவி முத்துலட்சுமி. படமெடுக்க அந்த ஜீப்பை பத்திரிகையாளர்கள் சூழ்ந்தபோது, "போங்கையா! உங்களால்தான் (!) இவ்வளவும் ஆகிப்போச்சு, இன்னும் என்னை எதுக்குப் படம் பிடிக்கிறீர்கள்? என்று சீறிவிட்டு, ஜீப்பில் இருந்து இறங்கிச் சட்டென்று மருத்துவமனைக்குள் நுழைந்து பொலீஸ் வளையத்தில் கலந்துவிட்டார். ☆

## கோப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் - கோப்பாய்

எமது கழகத்தினால் நடத்தப்பட்டுவரும் தமிழ் - ஆங்கில தட்டச்சு, தையல், தலையலங்காரம்,
பூ வேலைப்பாடு மற்றும் கேக் ஐசிங், இசை வகுப்புகள் (ஓகன், வயலின்) ஆகியவற்றுக்கான புதிய பிரிவுகள்
விஜயதசமி அன்று மாலை 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.
பயிலவிரும்புவோர் அன்று சமுகமளிக்குமாறு வேண்டப்படுகிறீர்கள்.
எமது சம்மேளனத்துடன் இணைந்து வடமராட்சி சுருக்கெழுத்தாளர் சங்கத்தினர் சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்படவுள்ளதால் ஆர்வமுள்ளவர்கள் விஜயதசமி அன்று பதிவுகளை மேற்கொள்ளவும்.
எமது சம்மேளனத்துடன் இணைந்து ★ SAAMSTECH இன் ஆங்கில மற்றும் சிங்கள வகுப்புகள் ஆரம்பமாகி நடை பெறுகின்றன.
பயிலவிரும்புவோர் (25.10.2004) அன்று பி.ப. 4மணிக்கு சமுகமளிக்கலாம்.
**இடம்: கோப்பாய் பெற்றோல் செற் முன்பாக.**
**- நிர்வாகத்தினர்.**
(37856)(34-11-46-26)



## கண்ணீர் அஞ்சலி

எமது புடைவை வர்த்தக குழாம் அன்பு நண்பன்
**க.கனகரத்தினம்** *(காவேரி சில்க்ஸ் ஊழியர்)*
அவர்களது அகாலமரணச் செய்திகேட்டு அதிர்ச்சிக்குள்ளான நாம், அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.
நியூ ராகம்ஸ் பட்டுச்சோலை,
இல.7.8. நவீன சந்தை. யாழ்ப்பாணம்.
**உரிமையாளரும், ஊழியர்களும்.**
(சி-38462) (26-11-46)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி இராசதுரை பாக்கியம்

இந்நிகழ்வு இன்று (22.10.2004) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகின்றது. அத்தருணம் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.
(37853)(39-11-46-26)
தகவல்:
**குடும்பத்தினர்.**

## ஏழாம் ஆண்டு நினைவலைகள்

*தோற்றம்* 19 – 11 – 1930



*மறைவு* 24 – 10 – 1997

### அமரர் கார்த்திகேசு இரத்தினம் (சபா)

திதி: அபரபக்க நவமி (22.10.2004)

ஏழாண்டுகள் சென்றாலும் நாம்
ஏங்கியே தவிக்கின்றோம்!
ஏழை உள்ளத்துடன் எம்மை
ஏங்க வைத்துப் போனீர்களே!
ஒப்பில்லாத தீபமாகிய உங்கள்
ஆத்மாவுக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

*நுணாவில் கிழக்கு,*
*கல்வயல், சாவகச்சேரி.*
(37696)(42-11-46-26)
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரன்.**

# நவராத்திரி விழாக்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.22

யாழ். பிரதேச செயலக்த்தின் வாணி விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் இடம்பெறவுள்ள இவ்விழாவில் இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் க.சிவதட்சணாமூர்த்தியின் சிறப்புரையுடன் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (10-86-202)

☆ ☆ ☆

சங்கானைப் பிரதேச செயலகத்தின் நலன் புரிச் சங்கத்தினால் நடத்தப்படும் நவராத்திரி விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பாடசாலை மாணவ, மாணவிகளின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (10-29-203)

☆ ☆ ☆

கோப்பாய்,ஒக்.22

ஊரெழு கணேச வித்தியாசாலையின் வாணி விழாவும் சைவநெறித் தேர்வில் பரிசில் பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இன்று வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு நடைபெறவுள்ளன. அதிபர் இ.குலசிங்கம் தலைமையில் இடம்பெறும் இவ்விழாவில் கோப்பாய ஸ்ரீசாயி நிலையத்தைச் சேர்ந்த ஆர்.ஞானசுந்தரத்தின் ஆன்மீக உரையும் இடம்பெறும். (10-72-202)

☆ ☆ ☆

வலி.வடக்கு,ஒக்.22

மல்லாகம் மகாவித்தியாலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை நவராத்திரி விழாவையொட்டிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் பாடசாலை அதிபர் கநாகேந்திரசீலன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

பாடசாலை மாணவர்களுக்கு இடையே இடம்பெற்ற கலை நிகழ்ச்சிகள் மற்றும் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, பண்ணிசைப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களின் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

நாளையதினம் சனிக்கிழமை நவராத்திரி விழா இடம்பெறவுள்ளது. (10-86)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஒக்.22

மாவை கொல்லங்கலட்டி விநாயகர் ஆலய மானம்பூ உற்சவம் நாளை சனிக்கிழமை மதியம் 12 மணியளவில் நடைபெறவுள்ளதால் இந்நிகழ்வில் கலந்துகொள்ளவிரும்புவோர் காலை 9 மணிக்கு தெல்லிப்பழைத் தடைமுகாமிற்குச் சமுகந் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.(10-203)

☆ ☆ ☆

வலி.வடக்கு,ஒக்.22

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தின் நவராத்திரி விழாவும் கேதார கௌரிவிரத ஆரம்பமும் நாளை சனிக்கிழமை ஆலயத்தில் இடம்பெறவுள்ளன.

காலை 7மணிக்கு நவராத்திரிப் பூசைகள் இடம்பெற்றுத் தொடர்ந்து அம்பாள் வீதியுலா வந்து மானம்பூ நிகழ்வு இடம்பெறும். 10 மணியளவில் வித்தியாரம்பம் இடம்பெற்றுத் தொடர்ந்து 12மணிக்கு கேதாரகௌரி விரத ஆரம்ப நிகழ்வும் இடம்பெறும். (10-203-86)

☆ ☆ ☆

நவாலி,ஒக்.22

மானிப்பாய் மகளிர் கல்லூரி நடத்தும் நவராத்திரி விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் கல்லூரி அதிபர் சூ.ஜெயவீரசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பாடசாலை மாணவிகளிடையே நடைபெற்ற கோலம்போடுதல், மாலை கட்டுதல், தோரணம் பின்னுதல், சகலகலாவல்லி மாலை ஓதல் போன்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கலும் தொடர்ந்து கலைநிகழ்வுகளும் இடம்பெறும். (10-203-100)

☆ ☆ ☆

சங்கானை,ஒக்.22

சங்கானை, மாவடி சனசமூக நிலையத்தால் நடத்தப்படும் வாணிவிழா நாளை சனிக்கிழமை காலை 8மணிக்கு தலைவர் க.ஸ்கந்தராசா தலைமையில் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் நிலைய நூல்களின் கண்காட்சியும் புதிதாக அமைக்கபட்ட பொது நூல் நிலையத் திறப்பு விழாவும் தொடர்ந்து ஏடு தொடக்குதலும் முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (10-203-29)

☆ ☆ ☆

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் வாணிவிழா நாளை சனிக்கிழமை மாலை 6மணிக்கு நிலையத் தலைவர் மா.புலேந்திரன் தலைமையில் நிலைய முன்றிலில் இடம்பெறும்.

விசேட பூசை ஆராதனைகளைத் தொடர்ந்து வளர்மதி கல்விக் கழக மாணவர்களின் பேச்சு, நடனம், நாடகம் என்பனவும் நடைபெறவிருக்கின்றன. (8-75)

## நிதர்ஸ் இசை நிறுவனம்

**புதிய வகுப்புகள் ஆரம்பம்**
❁ ஓகன் ❁ கிற்றார்
❁ ஹார்மோனியம் ❁ மலோடிக்கா
**R.கீதப்பிரியன்**
இடம்: **691, ஸ்ரேசன் வீதி, கோண்டாவில்.**
காலம்: **23-10-2004 சனிக்கிழமை (விஜயதசமி அன்று)**
நேரம்: **4.30p.m. (பு.நே.).**
(37852)

# விபத்தில் இளைஞர் காயம்

கைதடி, ஒக்.22

வேகமாக வந்த மோட்டார் சைக்கிளின் மீது குறுக்கே வந்த நாய் மோதியதில் மோட்டார் சைக்கிளை ஓட்டிவந்தவர் காலில் படுகாயம் அடைந்த சம்பவம் ஒன்று கடந்த 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை கைதடி வடக்கு, உதயசூரியன் வீதியிலே இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் கைதடி மத்தி வளர்மதி வீதியைச் சேர்ந்த கதிரன் பிரதீபன் (வயது 22) என்பவரே இவ்வாறு படுகாயமடைந்து சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார். (8-75)

## இடமாற்றம்

வலி.தெற்கு,ஒக்.22

வலி.தெற்கு பிரதேச செயலகத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றிவரும் தா.தியாகமூர்த்தி இம்மாதம் 15ஆம் திகதியில் இருந்து யாழ்ப்பாண மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக நியமனம் பெற்றுள்ளார்.(10-152)

## விற்பனைக்கு

**வைத்தியரின் தனிப்பாவனையிலிருந்த**
Bajaj Caliber Croma, Charlie
**மோட்டார் சைக்கிள்கள்,**
Minolta 700 Si Camera
**என்பன விற்பனைக்குண்டு**
தொடர்புகளுக்கு:
(37857) 0777 777 134.

## பிற்போடப்பட்டுள்ளது

**எமது கழகத்தால் 22-10-2004 இல் நடத்தப்பட இருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தால் 15-01-2005இல் அதிர்ஷ்டம் பார்க்கப்படவுள்ளது என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.**
**உதயசூரியன் சனசமூக நிலையம்,**
**உதயசூரியன் வீதி,**
**உடுவில் கிழக்கு, சுன்னாகம்.**
**- நிர்வாகி.**
(37841)(26-11-46)




## 2ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

109/2,சிவன் புது வீதி, நல்லூரைச் சேர்ந்த
***ஜெயக்குமார் - ரஞ்சினி***
தம்பதிகளின் செல்வப்புதல்வி
***லக்ஷாயினி***
தனது இரண்டாவது பிறந்தநாளை இன்று (22.10.2004) வெள்ளிக்கிழமை கொண்டாடுகின்றார். இவரை உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் சீரும் செழிப்புடனும் வளர வாழ்த்துகின்றனர். (38457)
**109/2 சிவன் புதுவீதி,நல்லூர்.** **தகவல்: உ.ஜெயக்குமார்.**

அம்பாள் துணை
கல்வியங்காடு
அருள்மிகு

## இலங்கைநாயகி மனோன்மணி அம்பாள் கோயில் கேதார கௌரி காப்பு

**திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி கோயில் கேதார கௌரி காப்பு அடியார்களின் வசதிகருதி இம்முறையும் வழமைபோல் மேற்படி ஆலயத்தில் வழங்கப்படும். கேதார கௌரி காப்பு பெறவிரும்பும் அடியார்கள் முன்கூட்டியே தங்கள் பெயர்களைப் பதிவுசெய்யும்படி கேட்டுக்கொள்கிறோம்.**

ஆரம்பம்: நாளை 23-10-2004 சனிக்கிழமை
எதிர்வரும் 12-11-2004 வெள்ளிக்கிழமை
காலை 10.00 மணி பூசையைத் தொடர்ந்து
கௌரி காப்பு நூல் வழங்கப்படும்.
**சு.பாலசுப்பிரமணிய ஐயர்,**
ஆலய உரிமையாளரும்,
ஆதீனகர்த்தாவும்.
(37858) (26-11-46)

## பணிநிலை வேண்டுகை

போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் சோதனை நிலையங்களுக்கு எழுதுநர் பணிநிலைக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

தகைமை:
01) க.பொ.த. (சா/த) தமிழ், கணிதம் உட்பட ஆறுபாடங்களில் தேர்ச்சி
02) க.பொ.த. (உ/த்) மூன்று பாடங்களில் தேர்ச்சி

ஊதியம்: நேரில் தீர்மானிக்கப்படும்

தகுதி உடையவர்கள் (இருபாலாரும்) 2004-11-01ஆம் திகதிக்கு முன்னர் தனி வரலாற்றுச் சான்றிதழ்களுடன் நடுவப் பணியகம் போ.க. பிரிவு கிளிநொச்சி என்னும் முகவரிக்கு வருக.
**போ.க.பிரிவு,**
**கிளிநொச்சி.**
(சி-38460) (26-11-46)

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினரும்
வலி.வடக்கு பிரதேச சபை
மயிலிட்டி உப அலுவலக நூலகருமான

**க.இ.கனகலிங்கம்**

அவர்களுடைய அகாலமரணச் செய்திகேட்டு அதிர்ச்சியுற்றோம். அவருடைய ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டிக்கொள்கிறோம்.

மயிலிட்டி உப அலுவலக ஊழியர் நலன்புரிச் சங்கம்,
(ச-38473) (32-13-15) வலிகாமம் வடக்கு பிரதேச சபை.

## கண்ணீர் அஞ்சலி

எமது மன்றத்தின் செயற்குழு உறுப்பினரும் மருத்துவபீட மாணவனுமாகிய தி.தவநேசனின் அன்புத் தந்தையார்

**முத்துவேல் தியாகராஜா**

அவர்கள் 14.10.2004 அன்று இறைபதம் எய்தியதையிட்டு எமது மன்றத்தின் சார்பில் அன்னாரின் குடும்பத்துக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்துமன்றம்,
யாழ்.பல்கலைக்கழகம்.
(ச-38476) (32-13-15)

## வித்தியாரம்பம்

இடம்: இளங்கலைஞர் மன்றம்,
*சட்டநாதர் வீதி, நல்லூர்.*
நாள்: 23.10.04 சனிக்கிழமை பி.ப.4மணி

- வாய்ப்பாட்டு / பண்ணிசை
- மிருதங்கம், வயலின், வீணை
- நாதஸ்வரம் / தவில்
- பரதநாட்டியம்

அனுபவம் மிக்க ஆசிரியர்கள் கற்பிப்பர். வகுப்புக்களிற் சேர்ந்து பயில விரும்பும் மாணவர்கள் உடன் பெயர்களைப் பதிவுசெய்துகொள்ளவும்.

(37870) (32-13-15) ~ செயலாளர்.

## இசைத்தட்டு வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.22

யாழ்.நகுலேஸ்வரி பண்பாட்டு மேம்பாட்டு நிறுவனம் நடத்தும் பேராசிரியர் என்.சண்முகலிங்கனின் 'அம்மா' இசைத்தட்டு, இசைநாடா வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மணடபத்தில் நடைபெறவுள்ளது. (4-6)

## புன்னாலைக்கட்டுவன் கொலை வழக்கு:
## பல்கலை மாணவர் இருவரும் பிணையில் செல்ல அனுமதி

யாழ்ப்பாணம்,ஒக்.22

புன்னாலைக்கட்டுவனில் வயோதிபர் ஒருவர் சுட்டுக்கொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக மல்லாகம் நீதிமன்றத்தில் சரண் அடைந்த யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இருவரையும் பிணையில் செல்ல யாழ்.மேல் நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

கடந்த மாதம் 9 ஆம் திகதி புன்னாலைக்கட்டுவனில் அருணாசலம் முததையா என்பவர் கொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக எட்டுப்பேர் மல்லாகம் நீதிமன்றத்தில் சரண் அடைந்திருந்தனர். மல்லாகம் நீதிவானின் உத்தரவுப்படி (14 ஆம் பக்கம் பார்க்க)

## மரண அறிவித்தல்கள்

### சோமசுந்தரம் பாலேந்திரன்

காரைநகர், விளானையைச் சேர்ந்தவரும் தற்போது கனடாவில் வசிப்பவருமாகிய சோமசுந்தரம் பாலேந்திரன் கனடாவில் (20.10.2004) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22.10.2004) வெள்ளிக்கிழமை கனடாவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*354/9 ,பருத்தித்துறை வீதி,*
*ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.* (37869)(32-13-15)
தகவல்:
A.S.சுரேந்திரன்

### வீரபாகு கனகரத்தினம்



மணியர்பதி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலைச் சேர்ந்த வீரபாகு கனகரத்தினம் அவர்கள் (20.10.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னரெத்தினத்தின் அன்புக் கணவரும் சிவக்கொழுந்து, முத்துதம்பி, சுப்பிரமணியம், ஐயாத்துரை, சதாசிவம், பவளம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் மல்லிகராஜா, நாகேஷ்வரி, சிவகுமாரி, ஜெயராஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரேமாவதி, தெய்வேந்திரராஜா (ஓமான்), சுமதி ஆகியோரின் அன்பு மாமனாரும் தினேசன், மாவீரர் சுவேதா, வேனுசா, யுனேசன், அனுஷா, கோபிகா, சங்கீதா - கணேஷ்வரன் (லண்டன்), கிருஷனா - மாயவன், தனுஷா, அஜந்தினி, திவேதன், கௌசிகன், ரிஷிகன், லக்ஷன், வைஷ்ணா ஆகியோரின் அன்புப் பேரனும் கோபிந், பிரவிந், ஜெயந், சுருதிகா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.10.2004) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

*மணியர்பதி வீதி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.* (37868) (32-13-15)
தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்.





We are looking for a suitable candidate, with not less than 3 years experience in the above capacity. Should be able to manage the transport division independently. He will be the directly answerable to the management in maintenance and movements of vehicles. Candidate with mechanical aptitude and transportation management will be given preference.

*Apply with full bio data and details of two non related referees.*

Send your applications on or before 29th October 2004

DEPOT MANAGER,
25, Brown Road, Jaffna.


## காலாவதியான பொருள்கள் அழிப்பு

தென்மராட்சி,ஒக்.22

சாவகச்சேரியில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் சாவகச்சேரி சுகாதாரத்திணைகளத்தினர் மேற்கொண்ட திடீர் பரிசோதனையில் விறபனைக்கு வைக்கப்படடிருந்த திகதி காலாவதியான 16 வகை உணவுப் பண்டஙகளைக் கைபபற்றினர் .

பொதுமக்கள் கொடுத்த தகவலை அடுத்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களான சு.மணிவர்ணம், ம.கர்ணன் ஆகியோர் நேற்றுக் காலை திடீர் பரிசோதனையை மேற்கொண்டனர்.

(எ-117)




## சாட்டி தொல்பொருள் ஆய்வுகள்

# போர் வீரனின் புடைப்புச்சிற்பம் நிலத்துக்கடியில் இருந்து மீட்பு!


மீட்கப்பட்ட குழி

கடந்த ஒரு மாதகாலத்திற்கு மேலாகச் சாட்டியில் தொல்லியல் ஆய்வை மேற்கொண்டு வரும் யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத் துறையைச் சேர்ந்த தொல்லியல் கற்கைநெறி மாணவ ஆய்வுக்குழுவினர் கடந்த திங்கள் என்று மிகத் தொன்மைவாய்ந்த போர்வீரர்களை சித்திரிக்கும் புடைப்புச் சிற்பங்களை நிலத்துக்கடியில் உள்ள பாறைக்குள் கண்டுபிடித்துள்ளனர்.

இக்கண்டுபிடிப்பு இலங்கைத் தமிழரின் தொன்மை பற்றிய வரலாற்று ஆய்வில் ஒரு திருப்புமுனை என்று இவ்வாய்வை வழிநடத்திவரும் கலாநிதி புஷ்பரட்ணம் கூறினார்.

இதனை அகநானூறு "நெடுநிலை நடுகல்" என வர்ணிக்கிறது.

இச்சிற்பம் 2 அடி விட்டமும் 12 அடி ஆழமும் கொண்ட வட்ட வடிவமாக கட்டப்பட்ட ஈமச்சின்னத்தில் 9 அடி ஆழம் கொண்ட மேற்குப்பக்க பாறையில் செதுக்கப்பட்டுள்ளது. அதில் கிழக்குப்புறம் பார்த்த நிலையிலுள்ள பெரிய மனிதன் தனக்கு வலப்புறமாக இருக்கும் சிறிய மனிதனின் தலையை தனது வலதுகையால் பிடித்து அடக்குவது போலவும் சிறிய மனிதன் அதைத் தனது இடதுகையால் தடுப்பதுபோலவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இச்சிற்பத்தின் காற்பாதங்களுக்கு அடியில் மட்பாண்டங்கள் காணப்படுவதுடன் மேலும் மூன்று அல்லது நாலு அடி ஆழத்தில் தொல் பொருள்கள் இருப்பதற்கான சாத்தியங்கள் தென்படுகின்றன. அவை முழுமையாக அகழப்பட்டு ஆராயப்படும்போது இச்சிற்பம், ஈமச் சின்னம் தொடர்பான மேலும் பல உண்மை கள் வெளிவரலாம்.


புடைப்புச் சிற்பம்

## சிங்கப்பூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பூருக்கு விரைந்தார்.

அங்கு அவரின் முக்கியத்துவம் கருதி அவருக்குரிய முழுப் பாதுகாப்பையும் அந்த நாட்டு காவல்துறையினர் வழங்கிவருகின்றனர் என ஒரு தகவல் தெரிவித்தது.

பாதுகாப்புக் கருதி வைத்தியசாலையில் இல்லாமல் வெளியில் ஓரிடத்தில் அவர் தங்க வைக்கப்பட்டு அவருக்குச் சிகிச்சையளிக்கப்படுவதாகவும் கூறப்பட்டது. தீவிர பாதுகாப்பு அவருக்கு வழங்கப்படுகின்றது.

அவரது தோள்பட்டையில் உள்ள சன்னத்தை அகற்றுவதற்காக அவருக்குச் சத்திரசிகிச்சை செய்தால் அது அவரது நரம்புத் தொகுதியைப பாதிக்கும் ஆபத்து இருப்பதாக அவரைப் பரிசோதித்த டாக்டர்கள் தெரிவித்தனர். அதனால், சத்திரசிகிச்சை மூலம் சன்னத்தை அகற்றும் முயற்சி கைவிடப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. அதற்குப் பதிலாக இயன் மருத்துவம் (Physiotherapy) மூலம் சன்னத்தை உடலுக்குள் வேறிடத்துக்கு சற்று நகர்த்துவதன் மூலம அவருக்கு நோவிலிருந்து நிவாரணம் பெற்றுக் கொடுப்பதற்கான வழிவகைகளை மருத்துவர்கள் ஆராய்ந்து வருகின்றனர் எனவும் கூறப்பட்டது.

தமது சிகிச்சையை முடித்துக்கொண்டு ஒருசில தினங்களில் கேணல் சூசை தாயகம் திரும்பிவிடுவார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2005 டிசெம்பரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில்தான் பிரதம நீதியரசருக்கு முன்னால் வெளியாள்கள் எவரும் இன்றி நடைபெற்றதனியான நிகழ்ச்சி ஒன்றில் தாம் செய்தார் என்றும்-

அதன்படி, 2006ஆம் ஆண்டு இறுதியில்தான் தமது தற்போதைய பதவிக்காலம் முடிவடைகின்றது என்றும் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தரப்பில் தற்போது கூறப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி -

2006 இறுதியிலேயே அடுத்த ஜனாதிபதித் தேர்தல் என்றும் -

அதுவரை தாம் பதவியில் நீடிக்கலாம் என்றும் - ஜனாதிபதி கருதுகின்றார் எனக் கூறப்பட்டது.

ஆனால், கடந்த ஜனாதிபதித் தேர்தல் 1999 டிசெம்பரில் நடந்ததால், ஆறு ஆண்டுகள் கழித்து 2005 டிசெம்பரில் அடுத்த தேர்தல் நிச்சயம் நடக்கவேண்டும் என்று அடித்துக் கூறுகின்றது பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே. கட்சி.

நேற்றுக் கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இது தொடர்பாகப் பேராசிரியர் பீரிஸ் கூறியதாவது:-

இலங்கையின் அரசமைப்புப்படி ஒரு ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்தின் நான்கு வருடங்கள் முடிவடைந்தபின் மீதி இரண்டு வருடங்களில் எந்த சமயத்திலேனும் அவர் விரும்பிய காலத்தில் தேர்தலை நடத்த முடியும்.

ஆனால், ஜனாதிபதி தமது ஆட்சிக்காலத்தின் ஆறு வருடங்களும் முடிவடைந்த பின் இனனும் அதனை நீடித்துக்கொண்டு போகமுடியாது. உடனடியாகத் தேர்தலை நடத்தியேயாக வேண்டும்.

இதனை ஜனாதிபதியாலும் தடுத்து நிறுத்த முடியாது. ஜனாதிபதித் தேர்தலை நடத்த தேர்தல் ஆணையாளருக்குப் பூரண அதிகாரம் உண்டு. அதன்படி, அடுத்த வருடம் டிசெம்பர் மாதம் தேர்தல் நடைபெற்றே தீரும்.

பொருள்களின் விலையேற்றத்தினால் இந்நாட்டு மக்கள் பெரும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். முன்னர் ஆயிரம் ரூபாவுக்கு உட்பட்டிருந்த செலவு இப்போது ஐயாயிரம் ரூபா வரை உயர்ந்துள்ளது. பொருள்களின்விலை அதிகரிப்பே இதற்குக் காரணம்.

இதனை நாம் சொல்லவில்லை. ஆளும் கட்சியில் உள்ள ஜே.வி.பியின் அமைச்சர் லால் காந்த என்பவர்தான் இதனைக் கூறியுள்ளார். பொருள்களின் விலை அதிகரிப்புப் பற்றியும், அதன் தாக்கம் பற்றியும் அரசு நன்கு உணர்ந்தே உள்ளது.

அப்படியிருந்தும் இந்த அரசு விலையதிகரிப்பைக் கட்டுப்படுத்தாததன் காரணம் என்ன?

அரச ஊழியர்களுக்கு எழுபது வீத சம்பள அதிகரிப்பை வழங்குவார்கள் என நாடாளுமன்றத் தேர்தலுக்குமுன் இந்த அரசுக் கூட்டமைப்பினர் வாக்குக்கொடுத்திருந்தனர். ஆனால், இன்றுவரையும் அதனை நிறைவேற்றாத நிலையில் பொருள்களின் விலைகள் ஐந்து தடவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அதன்படி பார்க்கப்போனால் 70 வீதத்தை ஐந்தால் பெருக்கியே சம்பள அதிகரிப்பை வழங்கவேண்டும்.

இருப்பினும் பொருள்களின் விலை ஏற்றத்தால் மக்கள்படும் கஷ்டத்தை ஓரளவேனும் நீக்க, வாக்குறுதியளிக்கப்பட்டது போல் 70 வீத சம்பள அதிகரிப்பையாவது வழங்குங்கள் என்று நாம் அரசைக் கேட்டுக்கொள்கின்றோம்.

ஜனாதிபதி தங்கள் கட்சிக்காரர்களுக்கே எல்லா வகையான சொகுசு வாழ்க்கையையும் ஏற்பாடு செய்துகொடுக்கின்றார். இந்நாட்டு மக்கள்மீது அவருக்குக் கவலையே இல்லை.

விலை அதிகரிப்பு ஏற்படும்போதெல்லாம் சர்வதேச மட்டத்தில் ஏற்படும் விலை அதிகரிப்பை அரசு காரணங்காட்டுகின்றது.

அப்படியென்றால், அரசு என்ற ஒன்று இங்கு தேவையில்லை - என அவர் கூறினார்.(எ-க)

## கருணா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகை குறைவாகவே காணப்பட்டது. மிகக் குறைந்த எண்ணிக்கையிலான பொதுமக்களே தமது கருமங்களை ஆற்றுவதற்காகப் பொது நிறுவனங்களுக்குச் சென்று வந்தனர்.

கருணா கட்சி ஆரம்பித்ததை எதிர்த்து பட்டிருப்புச் சந்தியிலிருந்து மண்முனை - தென் எருவில்பற்று பிரதேச செயலகம் வரை ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றும் இடம்பெற்றது. பதாகைகளை ஏந்தியபடி நூற்றுக்கணக்கான மாணவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு-கல்முனை சாலையில் போக்குவரத்துச்சபை பஸ்களும், தனியார் பஸ்களும் மிகக் குறைந்தளவு சேவையை நடத்தின. இதனால், போக்குவரத்துச் சேவைகளும் பாதிக்கப்பட்டிருந்தன.

(எ-க)

## பல்கலை மாணவர்...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் விளக்க மறியலில் வைக்கப் பட்டிருந்தனர்.

இவர்களை பிணையில் விடுமாறு கோரி சட்டத்தரணி மு.சபாநாதன் யாழ்.மேல் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு மீதான விசாரணை மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ். வரதராஜா முன்நேற்று இடம்பெற்றது.

இவ்வழக்கில் சந்தேக நபர்களாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் எண்மருக்கும் இவ் வழக்குத் தொடர்பாக எவ்வித தொடர்புகளும் இல்லை என்றும் -

இவர்களில் பல்கலைக்கழக மாணவர்களான ஜெ.துஷிகாந், இ.சீலன் ஆகிய இருவரும் எதிர்வரும் நவம்பர் மாதம் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் என்றும் -

ஏனையோர் குடும்ப பொறுப்புள்ள இளைஞர்கள் என்றும் தெரிவித்து அவர்களைப் பிணையில் விடுமாறு சட்டத்தரணி கோரினார்.

அரச சட்டவாதி செல்வி சுகந்தி கந்தசுவாமி மேற்குறிப்பிட்ட பல்கலைக்கழக மாணவர்களாகிய இரு சந்தேக நபர்களையும் பிணையில் விடுவதற்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றும்-

இவ்வழக்கின் விசாரணைகள் பூரணமாக முடிவடையாதபடியால் ஏனையோரை பிணையில் விட ஆட்சேபிப்பதாகவும் மன்றில் தெரிவித்தார்.

இவ்விருதரப்பு வாதங்களையும் செவிமடுத்த நீதிபதி பல்கலைக்கழக மாணவர்கள் இருவரையும் தலா 10 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் மல்லாகம் நீதி நிர்வாகப் பகுதிக்குட்பட்ட 45 வயதிற்கு மேற்படாத இரண்டு நிரந்தர அரச ஊழியர்களின் தலா 2 லட்சம் ரூபா சரீரப் பிணையிலும் செல்ல அனுமதி வழங்கியதுடன்- எஞ்சியவர்களின் பிணை மனுக்களை தள்ளுபடி செய்வதாகவும் கட்டளையிட்டார்.

ஜெயபாலசிங்கம் துஷிகாந், கந்தசாமி கனகலிங்கம், இரத்தினசிங்கம் சசீலன், இராசரத்தினம் விஷ்னுகரன், கனகலிங்கம் புருஷாந்தன், தம்பிராசா ஸ்ரீகாந்தா, நல்லரத்தினம் -வசீகரன் மற்றும் சிவசரணம் செல்வகேசவன் ஆகிய எட்டுப் பேரையும் பிணையில் விடுவிக்குமாறு கோரி யாழ்.மேல் நீதிமன்றில் பிணை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

(எ-3-5)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தளபதிகள் ஆகியோருடன் பேச்சுக்களை நடத்தியது.

உத்தேச பாதுகாப்பு ஒப்பந்தத்தின் கீழ் படையினருக்குப் பயிற்சி வழங்குதல், சிறியரக ஆயுதங்களை விற்பனை செய்தல் போன்ற விடயங்கள் இடம்பெறவிருக்கின்றன.

இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்த நகல் அநேகமாக இறுதி செய்யப்பட்டுவிட்டதாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கை வந்துள்ள இந்திய அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களையடுத்து ஒப்பந்தம் தொடர்பான விடயங்களில் இறுதிக்கட்டத்துக்கு வந்துள்ளோம். ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்படவேண்டிய 98 சதவீத விடயங்களில் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் இரு நாடுகளுக்கும் இடையே இராணுவப் பயிற்சிகள், கடற்படையினருடன் இணைந்து ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் புலனாய்வுத் தகவல் பரிமாற்றம் எனப் பல விடயங்கள் அடங்கியுள்ளன. இந்த ஒப்பந்தத்தை எப்போது கைச்சாத்திடுவது என்பது அரசே தீர்மானிக்கவேண்டும் - என்றார்.

இருநாட்டுச் செயலர்கள் மட்டத்தில் இறுதி வடிவம் பெற்றுள்ள ஒப்பந்தம் பாதுகாப்பு அமைச்சர், ஜனாதிபதி ஆகியோரின் அங்கீகாரத்துடனும் அமைச்சரவையின் அனுமதியுடனுமே கைச்சாத்திடப்படும். பெரும்பாலும் அடுத்த மாதம் நடுப்பகுதிக்கு முன்னர் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கிருந்து கொழும்புக்குப் புறப்படுவார்கள்.

கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்ததும் விசேட ஹெலிக்கொப்டரில் அவர்கள் கிளிநொச்சி புறப்படுவார்கள் எனத் தெரிகின்றது.

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் இராசரத்தினம்

(தொழில்நுட்ப உத்தியோகத்தர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை - வவுனியா)



அல்லாரை வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும்கொண்ட சுப்பிரமணியம் இராசரத்தினம் அவர்கள் 21.10.2004 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - பாறுவதிப்பிள்ளையின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லையா - இலட்சுமிப்பிள்ளையின் மருமகனும் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும் இராகவன் (Technical College, Vavuniya), இராகுலன் (R.D.A. Office, Mannar) இராதிகா, ரேணுகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் பரமேஸ்வரியின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.10.2004) சனிக்கிழமை மு.ப.11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அல்லாரை கொற்புலவு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கச்சாய் வீதி,*
*கொடிகாமம்.*
T.P: 0777374925

தகவல்:
செல்லையா நேசநாதன்
(மைத்துனர்)

(37872)(32-13-15)



விஜயதசமியை முன்னிட்டு
புதிய பிரிவு
ஆரம்பம் : 23.10.2004
பகல் 10.00 மணி

Diploma Courses
- Diploma in Microsoft Office
- Diploma in Internet Technology
- Diploma in Desk Top Publishing
- Diploma in Hardware Engineering
- Diploma in Visual Basic Programming

உங்கள் பதிவுகளுக்கு... விஜயதசமி தினத்தன்று முந்திக் கொள்ளுங்கள்.

புலமைப்பரிசில் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களும் இப்பிரிவில் இணைந்துகொள்ளலாம்.

தலைமை அலுவலகம் :
IBMS, # 410, K.K.S. Road, Jaffna.
கிளை நிறுவனங்கள் :
- N.M.M.V. Road, Nelliady
- Sangaththanai, Chavakachcheri

ஈசன் கல்வி நிலையம்
பௌதிகவியல்: திருதயாளன்
A/L 2005
மின்புலம்
SAT,SUN: 10.00 a.m.
THU,FRI: 4.00 p.m.
A/L 2006 பொறியியல்
THU, FRI:6.30 a.m.
DAY CLASS
ஒட்ட மின்னியல்
வெப்பவியல்
THU,FRI:10 a.m.
SAT, SUN,: 8.00 a.m.
ஆரம்பம்: 23.10.2004
(SAT)
(37849)

கணக்கீடு
A/L 2006
தொங்கல் கணக்கு
ஆரம்பம்: நாளை 3p.m.
A/L 2005 /Day Class
பிரிவு II
குறைமாத பங்குடமை
முடிவுக்கணக்கு
ஆரம்பம் : திங்கள் 4.30 p.m.
S.தவா
B.Com. (Hons) (Acc.Spl.)
NEW SCIENCE COLLEGE,
JAFFNA.
(37847)




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.10.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.